UNIVERSITY OF JAFFNA LIBRARY FEB 2001 PERIODICALS DIVISION

REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) ESTABLISHED 19 FEB. 1876

# பாதுகாவலன்

PATHUKAVALN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் : 124

இதழ் : 12

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

விலை : ரு 10/=

பக்கங்கள் : 14

# 2000 நத்தார் 2001 புதுவருட சிறப்பு மலர்

## பேச்சுவார்த்தைக்காக கிடைத்த ஓர் இறுதி சந்தர்ப்பம் இதுவாகும்

## நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினைக் காண

## கிறிஸ்மஸ் செய்தியில் யாழ். ஆயர் அழைப்பு



கிறீஸ்து பிறப்பின் 2000ஆம் யூபிலி ஆண்டு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடுவதற்கு நாம் எலலோரும் பேறுபெற்றவர்களே.

இருப்பினும் இந்த மகிழ்ச்சியின் விழாவை கோலாகலமாகக் கொண்டாட நாம் கொடுத்து வைக்கவில்லை. உலகம் முழுவதிலும் மகிழ்ச்சி பெருவாகத்திலும் உவகையிலும் இவ் விழா கொண்டாடப்படுகின்ற வேளையில் தமிழ் மக்கள் எல்லோரும் கவலையிலும் கலக்கத்திலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்விலும் இவ் விழாவினைப் பற்றியே நினைக்கவும் முடியாதவர்களாக இருப்பது வருத்தத்துக்குரியதே.

52 வருடகால இலங்கையின் சுதந்திரத்தில் தமிழ் மக்கள் இழப்புக்களையும் இறப்புக்களையும் மட்டுமே சந்தித்துள்ளார்கள். வெறும் மண்டையோடுகளையும் எலும்புக்கூடுகளையும் மட்டுமே சம்பாதித்துள்ளார்கள். இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி அவர்கள் பிரச்சினைகளை தீர்ப்பதாகக் கூறி அரசியல் இலாபம் தேடினார்களே தவிர ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை. அவை மாறி மாறி எதிர்க்கட்சிகளாக வந்தபோதும் திட்டமிட்டது போல் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய அடிப்படை உரிமைகளை எதிர்த்தார்களே தவிர நீதியோடு எதையும் செய்யவில்லை.

கடந்த 20 ஆண்டுகாலக் கொடிய போரும் அதன் தாக்கங்களும் அழிவுகளும் தமிழ் மக்களை சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாக்கியுள்ளது. பேச்சுவார்த்தைக்கான பல முயற்சிகள் பலதரப்பில் செய்யப்பட்டாலும் ஒருவர் ஒருவருக்கிடையில் ஏற்பட்ட நம்பிக்கையில்லாத் தன்மையும் ஏமாற்று யுக்திகளும் இனப்பிரச்சினையை இன்னும் விரிவுபடுத்தினவேயொழிய தீர்த்துவைக்கவில்லை.

அண்மையில் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களுக்கும் நோர்வே நாட்டு பிரிதிநிதி திரு எரிக் சொல்கெய்ம் அவர்களுக்குமிடையில் நடைபெற்ற நேரடிப் பேச்சுவார்த்தை இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் இனம்புரியாத ஒரு அமைதியையும் மன மகிழ்வையும் ஏற்படுத்தியுள்ளது. இதே வேளை கடந்தகாலத்தில் நடந்த பேச்சுவார்த்தைகள் போல தீர்க்கமான முடிவொன்றையும் காணாமல் இடையிலே முறிந்துபோய்விடுமோ என்ற பய உணர்வும் பலர் மனதுகளிலும் இருக்கவே செய்கிறது.

மாவீரர் தின உரையில் வேண்டப்பட்டுள்ளது போன்று பொருளாதாரத் தடையையும் மக்களின் தேவையற்ற இடம்பெயர்வு போன்ற துன்ப துயரங்களையும் நீக்கி இயல்பு நிலையை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைக்கான நல்ல சமிக்ஞைகளை அரசு உருவாக்க வேண்டும். அதேவேளை புலிகள் தரப்பினரும் அமைதி நிலைக்கும் கைதிகள் பரிமாற்றத்திற்கும் யுத்த நிறுத்தத்துக்கும் முன்வர வேண்டும். இது தூரநோக்கோடும் நம்பிக்கை உணர்வோடும் கடந்தகால கசப்பான அனுபவங்களையும் ஏமாற்று யுக்திகளையும் களைந்து ஒரு புதிய சரித்திரம் படைக்க இரு பகுதியினருக்கும் வழிவகுக்கும்.

பேச்சுவார்த்தைக்காக கிடைத்த ஓர் இறுதி சந்தர்ப்பம் இதுவாகும். இதனை தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், கட்சிப் பகைமை உணர்வுகள், இன வேறுபாடுகள், சுய இலாபங்கள், வறட்டுக் கெளரவங்கள் என்பவற்றை விட்டு இரு பகுதியினரும் அணுக வேண்டும். புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, ஏற்றுக்கொள்ளும் தன்மை, பரஸ்பர நட்புறவு, என்பவற்றோடு நடந்துகொள்ள வேண்டும்.

இறுதியில் இலங்கையில் இரு இனங்களாக ஒற்றுமையோடும் அன்போடும் வாழ வேண்டியவர்கள் நாம் என்பதை எப்போதும் மனதில் கொண்டு எம் எதிர்கால சந்ததியினருக்காக இப் பிரச்சினையை எமது காலத்திலேயே மிக விரைவாக தீர்த்துவிட இறுதிவரை உழைக்க வேண்டும்.

இலங்கை வரலாற்றில் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் பயங்கரமான கொடூர அனுபவங்களையும் இலங்கையின் எதிர்கால சந்ததியினரையும் மனதில் கொண்டும் இப் பேச்சுவார்த்தையை ஓர் அரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்துங்கள். நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினை பெறுவதற்கு "இப் பேச்சுவார்த்தையை" கவனமாகப் பயன்படுத்துங்கள் என சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மனிதாபிமானத்தின் பெயரால் மிகவும் இரக்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம்.

யூபிலி ஆண்டுக் கிறிஸ்மஸ் விழாவினை கொண்டாடவிழைகின்ற அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிக்கிறோம்.

*மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்*
*யாழ். ஆயர்*



சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடரொளி உதித்துள்ளது (எசா. 9:2)

**நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்**

**HAPPY CHRISTMAS AND NEW YEAR**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சமூக அநீதிக்கு எதிர்ப்புக்காட்டாதிருந்தால் நாமும் பங்காளிகளே!”

## பத்திரிசியார் கல்லூரியின் 150ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவில் ஜெயக்குமார் அடிகள்

புனித பத்திரிசியார் கல்லூரியின் 150ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மனித முன்னேற்ற நிலைய இயக்குனர் கி.ஜோ. ஜெயக்குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழுமியக் கல்வி பற்றி (Value education) அவர் ஆற்றிய உரையில் யாழ். சமூகத்தை ஆய்வு செய்தவர்கள் கண்ட உண்மை எதுவெனில், யாழ். மக்கள் பொதுக்குடும்ப உணர்வு அதிகம் கொண்டவர்களாகவும் சமூக உணர்வு அற்றவர்களாகவும் இருப்பதேயாம். *“உன்னைப் போல் உன் அயலானை நேசி”* என்று இயேசு சொன்னதன் அர்த்தம் அயலவனை அவன் வாழும் சமூகத்தே என்பதாகும். எனவே அனர்த்தங்கள் எங்கள் வீட்டை நெருங்கும் வரை மௌனிகளாக இராது, நாமும் விழிப்புணர்வுடன் பொது விடயங்களில் பங்கெடுத்து சமூக உணர்வு கொண்டவர்களாக செயற்பட வேண்டும். சமூக அநீதிகளுக்கு எதிர்ப்புக் காட்டாது மௌனமாக இருந்தால், நாமும் அதன் பங்காளிகள் என்பதை மறக்கக் கூடாது என்று தெரிவித்தார்.




## “இது எங்கள் காணிக்கை” ஒலிநாடா வெளியீடு

றெக்ஸ் சவுந்தரா அடிகளாரின் இசையமைப்பிலும் இசையியக்கத்திலும் “இது எங்கள் காணிக்கை” என்ற ஒலிப்பதிவு நாடா 21-12-2000 அன்று சில்லாலை றோ.க. பாடசாலையில் வெளியிடப்பட்டது.

இதன் பாடல்களை அருள்திரு கிருபாகரன், அருள்திரு ஜோர்ஜ் றெனோல்ட், அருள் திரு றெக்ஸ் சவுந்தரா ஆகியோருடன் இளவாலை A.R.விஜயகுமார், சில்லாலை M.மனோகரன், ஊறணி சாந்த மீனா, சக்கோட்டை தாரணி, தீபா ஆகியோர் பாடியுள்ளனர்.

மேற்படி நிகழ்வுக்கு யாழ். ஆயர் பிரதம விருந்தினராகவும் அமலமரித் தியாகிகளின் ஆசிய - ஓசியானியா பிராந்திய பொது ஆலோசகர் P. ஜேசுநேசன் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். இசைத் தென்றல் மறையாசிரியர் M. ஜேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் ஆய்வுரையை M.றெஜிஸ் இராஜநாயகம் அடிகள் நிகழ்த்தினார்.

## புதிய சமாதான நீதிவான் ஞா. அருளானந்தம்

யாழ். புனித மரியன்னை பேராலய பங்கை சார்ந்த திரு ஞானப்பிரகாசம் அருளானந்தம் 8.12.2000 அன்று யாழ். மாவட்ட நீதிபதி திரு. K. திருநாவுக்கரசு முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். 315, பாங்சால் வீதியை சார்ந்த இவர் யோ. ஞானப்பிரகாசம் J.P. அவர்களின் புதல்வராவார்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவரான இவர் யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தின் முன்னாள் உதவி முகாமையாளரும் மனித முன்னேற்ற நடுநிலைய அதிகாரியும் புனித மரியாள் பேராலய மேய்ப்புப் பணி சபை உறுப்பினரும் புனித வின்சென்டிபோல் சபை புனித சூசையப்பர் பந்தியின் உறுப்பினரும் ஆவார். இவரின் பணி சிறக்க பாதுகாவலனின் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

## கொழும்பு மறைமாவட்டத்திற்கு புதிய துணை ஆயர்

27-11-2000 அன்று திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் கண்டி தேசிய குருமட அதிபரான அருள்திரு மேரியஸ் பீரிஸ் அவர்களை கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமித்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான இவர் தமது மேற்படிப்பை வத்திக்கானிலும் லண்டனிலும் மேற்கொண்டுள்ளார். 1995ஆம் ஆண்டு தொடக்கம் 1998வரை கொழும்பு மறைமாவட்ட குருமுதல்வராக பணியாற்றிய இவர் துணை ஆயர் நியமனம் கிடைக்கும்வரை அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி 2001 துணை ஆயராக திருநிலைப் படுத்தப்படவுள்ளார்.

## அனைத்து கற்கைநெறிகளும் இயேசுவை அறிவிப்பதையே இலக்காகக் கொள்ளவேண்டும்

யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் J.P.E. செல்வராஜா அடிகள் சவேரியார் குருத்துவக் கல்லூரியின் கல்லூரி விழாவில் கலந்துகொண்டு திருப்பலியாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தம் உரையில், பல்கலைக்கழக கல்வி உலகியல் நோக்குக் கொண்டது. ஆனால், குருமட படிப்போ அதைவிட வேறுபட்டது. நீங்கள் எதைப் படித்தாலும் அதன் நோக்கம் கிறிஸ்துவை அறிவிப்பதாகவே இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் லண்டன் பயணம்

கிளி. - முல்லை. மறைக்கோட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் இருதயநோய்க்காளாகி அண்மையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டார். அதன்பின்னர், இளைப்பாற்றிக்காக அவர் இங்கிலாந்து பயணமானார்.

தமது வருத்த நேரத்தில் தமக்காக வேண்டிக்கொண்ட குருக்கள், பொதுநிலையினர் அனைவருக்கும் தம் நன்றியினை அவர் தெரிவித்துள்ளார்.

## பிரான்சில் ஒளிவிழா

பிரான்சு சென். ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் யூபிலி ஆண்டு ஒளிவிழா நிகழ்வு அண்மையில் பாரிசில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் பிரான்சில் வாழும் குருநகர் மக்கள் பலரும் கலந்து கொண்டனர். நாடகம், நாட்டியம், நாட்டுக்கூத்து, இன்னிசை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. யாழ். சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்ற கழகத்தினால் மேற்படி ஒளி விழாவுக்கு வாழ்த்துச் செய்தியொன்று அனுப்பப்பட்டது.

## ஊர்காவற்றுறை திருப்பாலர் சபை ஒன்றுகூடல்

ஊர்காவற்றுறை பங்கிலுள்ள திருப்பாலத்துவ சபை அங்கத்தவர்கள் அனைவரும் கார்த்திகை மாத இறுதியில் மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒன்றுகூடினர். திருப்பாலர் சபை இயக்குனர் றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் மேற்படி நிகழ்வில் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றும் போது சிறுவர்கள் பகிர்ந்து வாழ்வதன் மூலம் கிறிஸ்துவின் மறைதூதர்களாக விளங்க முடியும் என்று தெரிவித்தார்.

150றகு மேற்பட்ட சிறுவர்கள் பங்குகொண்ட இந்நிகழ்விற்கு பங்குத்தந்தை ஜேசுதாசன் அடிகளின் ஒழுங்கில் மெலிஞ்சிமுனை மக்கள் மதிய உணவு அளித்து மகிழ்ந்தனர்.

## மருதமடு அன்னையின் திருசொரூப பவனி

### சமாதானத்தை வேண்டி கத்தோலிக்க திருச்சபையின் உத்தியோகபூர்வ நிகழ்வு

இலங்கை மண்ணில் நிரந்தர சமாதானம் நிலவ நடைபெற இருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு தெரிவித்து இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபை உத்தியோகபூர்வமாக நடாத்துகின்ற ஒரு செயற்பாடாக இது அமையவிருக்கிறது. மடு அன்னையின் சொரூபத்தை இலங்கையின் தென் பகுதிக்கும் திருப்பயணம் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கத்தோலிக்க ஆயர் கூட்டத்தில் தெரிவித்த விருப்பத்தை அனைத்து ஆயர்களும் ஒரு மனமதாக ஏற்றுக்கொண்டு மேற்படி ஒழுங்குக்கான கால நேர ஒழுங்குகளை மாசி மாதம் கூடும் போது தீர்மானிப்பதாக முடிவெடுத்தனர்.

அநுராதபுரம், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, வாகக்கோட்டை, ஆகிய இடங்களுக்கு மடு அன்னையின் சொரூபம் எடுத்துச் செல்லப்படும். தேவத்தையில் விசேட வழிபாடுகளும் நடாத்தப்படவிருக்கின்றன.

*

## பேராலயகிறிஸ்மஸ் புத்தாண்டு நிகழ்வுகள்

24.12.2000 இரவு நள்ளிரவுத் திருப்பலி ஆயர் தலைமையில். இத்திருப்பலி இலங்கை வானொலி - பலாலி சேவையில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். 25-12-2000 காலை 6.30 மணிக்கு ஆயர் தலைமையில் கிறிஸ்மஸ் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். காலை 8.30 மணிக்கு இரண்டாம் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதே போல புதுவருட தினத்தன்றும் நடைபெறும்.

## முதல் கன்னியர்களில் ஒருவரான சகோதரி நசரேத்



முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பின் ஆனந்தபுரம் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் மிக்கேல் ஆர்க்காஞ்சலோ மார்சலீனம் தம்பதியினர். இவர்களின் மூன்று பிள்ளைகளில் கடைக்குட்டியானவள் மேரி நசரேத். இவர் தனது ஆரம்பக் கல்வியைப் புதுக்குடியிருப்பிலும் பின்னர் அனுராதபுரம் திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும் பயின்றார்.

சிறுவயது முதல் அன்பு, பக்தி என்பவற்றை அணிகலன்களாகக் கொண்ட இவர் வணக்கத்துக்குரிய அருள்தந்தை தோமஸ் அடிகளின் செபமாலைக் கன்னியர் சபையில் 1950ல் தன்னை இணைத்துக் கொண்டார். செபம், கடுமையான தபம் ஆகியவற்றில் தொடங்கப்பட்ட இச் சபையின் முதல் பத்து நவ கன்னியரில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அருள்சகோதரி மேரி நசரேத் 1953 ஒக்ரோபர் 7ஆம் நாள் தனது முதல் அர்ப்பணத்தை ஆண்டவர் முன் செய்துகொண்டார். எமது இல்லங்கள் புதிதாக தொடங்கப்படும் போது ஏற்படும் சிரமங்களை பொருட்படுத்தாது சபையினரின் வளர்ச்சியை முன்வைத்து அன்போடும் பணிவோடும் அவர் ஆற்றிய பணிகள் இன்றும் மறக்க முடியாதவை. அழுவாரோடு அழுது சிரிப்பாரோடு சிரித்து என்றும் தம்மை தாழ்ச்சியிலும் இறையன்பிலும் வளர்த்துக்கொண்ட இவரது வாழ்க்கை அனைவருக்குமே ஒரு கலங்கரைத் தீபமாக விளங்கியது.

நோய் நோக்காது பார்க்காது துன்பத்தைத் தூசி எனத் தட்டி எறிந்து தம் சகோதரிகளுடைய நல் வாழ்க்கைக்காக சகோதரி ஆற்றிய பணிகள் அற்புதமானவை. இவரது பணிகள் இங்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் வடக்கன் குளத்தில் நவ கன்னியரின் ஆசிரியையாகவும் கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் சகோதரிகளுக்காக ஆற்றிய பணிகள் என்றுமே மறக்க முடியாதவை.

இவரது சேவை மன்னார் மறைமாவட்டத்தில் எம் சபைக் கன்னியரை பொறுப்பேற்று நடாத்தியதில் தொடர்ந்தது. அத்தோடு அச்சுவேலி, வசாவிளான் ஆகிய மடங்களிலும் புரிந்த பணிகள் என்றுமே நீங்காத நினைவுகளாகும். சிறப்பாக சபையின் தலைமை நிர்வாகப் பணிகளில் பல வருடங்கள் ஈடுபட்டு உழைத்தமை குறிப்பிடத்தக்கது.

அர்ப்பணிக்கப்பட்டோருக்காகச் செபிப்பது இவரது வாழ்வில் முக்கியமாக இடம்பெற்றது. இன்னும் சிறப்பாக நம் சபையைச் சேர்ந்த குருக்கள், துறவிகள், கன்னியர்களுக்காகச் செபிப்பதிலும் அவர்களோடு சபை நிறுவுனரின் வாழ்வின் அனுபவங்களை எடுத்தியம்புவதிலும் வாழ்வு செலவழிக்கப்பட்டது என்பதுமதிக உன்னதமானது. எம் அன்புச் சகோதரி 2000ஆம் ஆண்டு ஆடி மாதம் 15ஆம் திகதி தனது 71ஆவது வயதில் அன்பர் யேசுவின் அழைப்பை ஏற்று இவ்வுலகை விட்டேகினார்.

மாதங்கள் ஐந்து கடந்துவிட்டாலும் சகோதரியின் மாறாத அன்பு மறக்க முடியாதது. இவரது சிரித்த முகமும் அன்புச் சேவையும் எம் கண் முன் என்றும் நிற்கின்றன. சகோதரிதான் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் இவரது நினைவுகள் எங்களில் என்றும் உயிரானவையே!

***செபமாலைக் கன்னியர், யாழ்ப்பாணம்***

MERRY CHRISTMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கு மறையாசிரியர்களின் யூபிலி பயணம்

# "பங்குத் திருச்சபைக்கு உயிரூட்டுபவர்கள் மறையாசிரியர்களே"

### அருள்திரு ஜெபரட்ணம்

மலர்ந்துள்ள யூபிலி ஆண்டின் பரிபூரண பலன்களைப் பெறும்பொருட்டு யாழ். மறைக்கல்வி நடுநிலையப் பணியகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மறையாசிரியர்களுக்கான திருவருகைக்கால தியானமும், யாத்திரையும் 10.12.2000 ஞாயிறன்று காலை 9.30 மணிக்கு பண்டத்தரிப்பு பரிசுத்த பற்றிமா அன்னை யாத்திரைத் தலத்தில் யாழ். மறைக்கல்வி நடுநிலைய பணியகத்தின் இயக்குனர் நேசராஜா அடிகள் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப உரை வழங்கிய யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டுக் குழு ஆணையாளர் ஜெபரட்ணம் அடிகள், "மறையாசிரியர்களே பங்குத் திருச்சபையின் உயிர்நாடிகள்; இவர்களது பணி சிறப்புற அமையாதுவிடின் பங்குத்திருச்சபை இறந்துவிடும். எனவே இப்பணிக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் முழுமையான அர்ப்பண மனப்பாங்குடனும், பொறுப்புடனும் செயற்பட்டு பங்குத் திருச்சபையின் உயிரூட்டமுடையதாக்க வேண்டும்" என வலியுறுத்தினார். மேலும் அவர் தமது உரையில் குறிப்பிடுகையில், "ஆசிய ஆயர் பேரவை விடுத்துள்ள மறையாசிரியர் பணிபற்றிய கொள்கைத் திரட்டில் குறிப்பிட்டுள்ள சில அம்சங்களை மேற்கோள்காட்டி, உண்மையான செபம் என்பது முழுமையான பணி ஏற்பதாகும். இதற்காக ஒவ்வொரு மறையாசிரியர்களும் கையளிப்பு நிறைந்த தன்மையில் பங்குத்தந்தையுடன் இணைந்து செயலாற்ற முன்வரவேண்டும். மேலும் இன்றைய மறையாசிரியர்கள் தமது சொந்த நலனைக் கருதி தமக்கு அளிக்கப்பட்டுள்ள இந் நற்செய்திப் பணிக்கு முதலிடம் கொடுக்கத் தவறுகின்றனர். மறையறிவிப்புப் பணியே தமது வாழ்வின் முதற் கடமையான பணி என்பதை உணரவேண்டும். அத்துடன் வகுப்பறைக் கற்பித்தலுக்குக் கூடுதலான முக்கியத்துவம் அளிப்பதைக் தவிர்த்து, அனுபவக் கல்வி மூலம் மாணவர்கள் இறையனுபவத்தை ஆழமாகப் பெற வழிவகுக்க வேண்டும். இதற்கு மறையாசிரியர்கள் தனிப்பட்ட மறை அனுபவத்தோடு மட்டும் இல்லாது, குழு அனுபவத்தை ஏற்படுத்தும் அன்பிய ஆன்மீகத்தை வளர்த்தெடுக்க வேண்டும். அத்துடன் மறையாசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் காலத்தின் வளர்ச்சிக்கேற்ப அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். பயிற்றப்பட்ட நிரந்தர மறையாசிரியர்கள் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும். மறையாசிரியர்களுக்கான உரிமைகள் நிறைவுசெய்யப்பட திருச்சபை ஆயர்கள் அக்கறை கொள்ளவேண்டும். மறைக்கல்வி மாணவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான நவீனத்துவ வளங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றினூடாக அவர்கள் இறையனுபவ அறிவினைப் பெற வழிவகுக்க வேண்டும் எனவும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து 2 மணித் தியாலங்களுக்கு மேலாக உளமாற்ற வழிபாட்டினை இறையியல் விரிவுரையாளரான அருள்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அவர்கள் நடாத்தினார். ஒருமுறை பாடுவது இருமுறை செபிப்பதற்கு சமம்' என்ற பொருள்பட ஆழ்ந்த இறையியல் கருத்துக்களை பாடல்கள் மூலமாக வெளிப்படுத்தியும், இறைவார்த்தைகள் ஊடாக எடுத்தியம்பியும் உண்மையான இறையனுபவ தியானத்தில் மூழ்க வைத்தார். வழிபாட்டு நிகழ்வினூடாக பாவசங்கீர்த்தன அருள்சாதனமும் வழங்கபட்டது.

இந் நிகழ்வு சிறப்புற அமைய யாழ். மறைமாவட்டத்தின் பெரும்பாலான பங்குகளில் இருந்தும் ஏறக்குறைய 200 மறையாசிரியர்களுக்கும் அதிகமானோர் பங்குகொண்டு அந்நாளினை முழுமையான இறையனுபவத்தினைப் பெறும் நாளாகப் பயன்படுத்தினர். பங்குகொண்டோரின் ஆன்மீக நலத்தேவைகளுடன் உடல் நலத் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் முன்னின்று உழைத்த மறைப்போதகர் திரு. S. சவுந்தரம் ஆசிரியரின் பணியும் சிறப்புற அமைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

*S.M. வுளோறன்ஸ்*
*(இளவாலை நிருபர்)*

# யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி தேர்வு முடிவுகள்

கடந்த 21.10.2000 அன்று நடந்தேறிய யாழ். மறைமாவட்ட மறைக்கல்வித் தேர்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பங்குத்தந்தையர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் யாவருக்கும் எமது உளங்க கனிந்த நன்றியைக் கூறி நிற்கிறோம்.

சிறப்பாக நாம் பரீட்சை நடாத்த நாம் அனுமதி கோரியவுடன் தாமதமின்றி அனுமதி வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பரீட்சை வினாத் தாள்களைத் தயாரிப்பதற்கு உதவிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய உதவிய இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், இளவாலை கன்னியர் மகா வித்தியாலய ஆசிரியர்கள், இளவாலை திருக்கும்ப கன்னியர்களுக்கும், மானிப்பாய் பங்கு மறையாசிரியர்களுக்கும், யாழ். புனித மரியாள் வித்தியாலய ஆசிரியர்கள், மற்றும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் எம் இதயங் கனிந்த நன்றியை கூறி நிற்கின்றோம்.

## பரீட்சை முடிவுகள்

*ஆர்.சி. எக்ஸ். நேசராஜா*
*இயக்குனர்,*
*யாழ். மறைக்கல்வி நிலையம்*

| தரம் 5 | | |
|---|---|---|
| இடம் 1 | விஜேந்தினி குமாரகுலசிங்கம் | யா/தி.கு.க.மடம் |
| இடம் 2 | ஜெ. ஜெசிக்கா பாணினி | ஜோண் பொஸ்கோ வித். |
| இடம் 2 | மேரி சில்வெஸ்டர் சில்வேரியஸ் | யா/தி.கு.க.மடம் |
| இடம் 2 | செறின் பௌஸ்ரீனா பஸ்ரர் | யா/தி.கு.க.மடம் |
| இடம் 3 | அ. கிறிஸ்ரீனா | ஜோண் பொஸ்கோ வித். |
| இடம் 3 | ஏஞ்சலின் அவித்தா அருள்ஜோதி | யா/தி.கு.க.மடம் |

| தரம் 6 | | |
|---|---|---|
| இடம் 1 | இ. அனெற் நிந்துஜா | யா/வேம்படி மகளிர் கல். |
| இடம் 2 | ஆ. பகீதரன் | நாவாந்துறை றோ.க. |
| இடம் 3 | வ. பியந்தினி | இளவாலை கன்னியர் மடம் ம.வி. |
| இடம் 3 | அ. சுதாஜினி | கரம்பொன் சிறிய புஸ்பம் ம.ம.வி. |

| தரம் 7 | | |
|---|---|---|
| இடம் 1 | அ. யுஸ்தினி | அல்லைப்பிட்டி பராசக்தி வித். |
| இடம் 2 | ஜெ. றொகான் விக்ரர் | சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| இடம் 2 | அ. மேரி கொன்சலிற்றா | ஊ- புனித மரியாள் வித். |
| இடம் 3 | சி. நிசாந்தன் | சென். ஜேம்ஸ் ம.வி. |
| இடம் 3 | யோ.ஆன் சில்விக்ஸ் தயாளினி | யா/தி.கு.க.மடம் |

| தரம் 8 | | |
|---|---|---|
| இடம் 1 | தா. மேகலா | யா/புனித. அந்தோனியார் றோ.க.ம.வி. |
| இடம் 2 | வோ. மேரி டெல்சியா | யா/புனித. அந்தோனியார் றோ.க.ம.வி. |
| இடம் 3 | அ. ஜோய் றோஸ் | யா/க.மடம் ம.வி. |
| இடம் 3 | த. றெஜி நிசாந்தன் | யா/ஹாட்லிக் கல்லூரி |

| தரம் 9 | | |
|---|---|---|
| இடம் 1 | சாலினி பர்ணான்டோ | யா/தி.கு.க.மடம் |
| இடம் 2 | ஆ. விலாஜினி மரினா | ஊ./புனித மரியாள் வித். |
| இடம் 2 | ப. தர்மினி | இளவாலை கன்னியர் மடம் ம.வி. |
| இடம் 3 | த. காமல் பியோமி | யா/தி.கு.க.மடம் |

| தரம் 10 | | |
|---|---|---|
| இடம் 1 | ஸ்.அனெற் ஸ்ரமிலா | இளவாலை கன்னியர் மடம் ம.வி. |
| இடம் 2 | அ.அஞ்சலின் ஜோதினி | யா/தி.கு.க.மடம் |
| இடம் 3 | எ.லுமின் கொன்சேக்கா | பரு./மெதடிஸ் பெண்கள் கல். |
| இடம் 3 | மேரியன் நிர்மலின்யோசப் | யா/தி.கு.க.மடம் |

| தரம் 11 | | |
|---|---|---|
| இடம் 1 | திரேசா லக்சி .ச. | யா/தி.கு.க.மடம் |
| இடம் 2 | சுஜந்தா நவந்தினி .ம | யா/தி.கு.க.மடம் |
| இடம் 2 | அலிஸ் ஜோன்சன் பசில் | யா/தி.கு.க.மடம் |
| இடம் 3 | ஜே.யூ. அருட்செல்வன் | யா/புனித பத்திரிசியார் கல். |
| இடம் 3 | இ. யூட் சுவேன் | பரு. ஹாட்லிக் கல். |

## சேர். சிற்றம்பலம் கார்டினரின் உருவச்சிலை

கடந்த மார்கழித் திங்கள் 10ம் நாள் காலை 10.00 மணியளவில் எமது அச்சுநகர் மண்ணில் உயிர்காக்கும் சேவையை நிறைவேற்றும் வைத்தியசாலைக்கு அடித்தளம் இட்ட சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் அவர்களின் உருவச்சிலை திரை நீக்கம் செய்யப்பட்டது.

எமது மண்ணின் மைந்தரும் யாழ். மறைமாவட்டக் குரு முதல்வருமாகிய அருள்திரு J.P.E. செல்வராஜா அவர்களால் உருவச்சிலை திரை நீக்கம் செய்யப்பட்டது.

அச்சுவேலி வைத்திய சாலை அதிகாரி திரு. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருள்திரு ஜெபநேசரட்ணம் அடிகளார், அருட்சகோதரிகள், வைத்திய சாலை உத்தியோகஸ்தர்கள், பெற்றோர், பெரியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*தகவல்:*
*அச்சுவேலி நிருபர்*

## அழைப்பிற்கு வலுசேர்த்த யூபிலி நிகழ்வு

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆரம்ப குருமட மாணவர்களான புனித மடுத்தீனார் குருமடம் புனிதவளனார் அமதிகள் குருமடம், கிளறீசியன் குருமடம், செபமாலைத்தாசர் சபைக் குருமடம், திருவுளச் சபைக் குருமடம் போன்ற குருமடங்களின் மாணவர்கள் பங்குபற்றிய யூபிலி பலன் பெறும் நிகழ்வு கடந்த மார்கழி மாதம் 2ம் திகதி நடைபெற்றது. அருள்திரு ஜெபரட்ணத்தின் நெறிப்படுத்தலில் அருள்திரு ஜெயந்தன் பச்சேக்கின் யூபிலி தியான விழிப்புணர்வு ஆரம்ப உரையுடன் ஆரம்பமாகிய இந் நிகழ்வு தியான இல்லத்தில் இருந்து செபமாலை யாத்திரையுடன் யாத்திரைத் தலமான புனித பற்றிமா அன்னை ஆலயம் சென்றது. அங்கு நீக்கிலஸ் அடிகளாரின் அழைப்பின் மகத்துவம், அதற்கு இன்று ஏற்படும் தடைகள், இதைச் சமாளிக்க எமக்கு இருக்கவேண்டிய பிரமாணிக்கத் தன்மை, இதற்கு ஆன்மீக வழிகாட்டிகளின் பங்கு, இதனால் எம்மில் உருவாகும் ஆன்மீக வளர்ச்சி என்பன பற்றிய ஆழமான அர்த்தம் பொதிந்த உரை நிகழ்த்தப்பட்டது.

குருமுதல்வர் J.P. செல்வராஜா அடிகள் அழைப்பில் பயணிக்கும் நாம் எதிர் காலத்தில் நற்குருக்களாக மலர நற்கிரிகைகள், தியாகங்கள், செபங்கள் என்பவற்றை குருவாக வந்தபிறகு செய்வதைவிட இன்றே செய்ய வேண்டும் இது அதற்கான நல்ல பருவம் என்பதையும் தனது மறையுரையில் குறிப்பிட்டார்.

*P. A. யேசுதாஸ்*
*புனித வளனார் அமதிகள் குருமடம்.*

MERRY CHRISTMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஆலயம் தன்னில்
அமைவுற வைத்துத்
தேவதூதன் செப்பிய
படியே
இயேசு எனும் பெயர்
இட்டு மகிழ்ந்தனர்"

இயேசு காவியம்

# ஏழ்மை ஒன்று ஏற்றம் பெறுகிறது!

"அவர் தமக்குரியவர்களிடம் வந்தார்
அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" யோவா1:11

கடந்தகால கசப்பான அனுபவங்களுடன் புதிய எதிர்பார்ப்புக்களுடனும் ஏக் கங்களுடனும் இன்னுமொரு நூற்றாண்டில் காலடி பதிக்கின்றோம். சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம், அமைதி, ஒற்றுமை, மன மாற்றம் என மிக அழகான சொற்றொடர்களின் ஆதங்கத்துடனும் ஓங்கி ஒலிக்கும் ஓசையுடனும் புது யுகத்தில் புக எத்தனிக்கின்றோம். தொடரும் யுத்தங்கள், அரசியல் அழுத்தங்கள், பொருளாதாரத் தடைகள், சமூக ஒடுக்குமுறைகள் என்பனவற்றின் மத்தியில் நாம் எல்லோரும் தனித்தனியே எம் இல்லங்களில் கிறிஸ்து பிறப்பை வரவேற்க காத்திருக்கின்றோம்.

வரலாற்று மாமனிதன் இயேசுவின் பிறப்புவிழா எமது விசுவாசத்தின் கிறிஸ்து பிறப்பு விழாவாகவும் மாபெரும் மீட்பு விழாவாகவும் ஏழ்மையின் ஏற்ற விழாவாகவும் நினைவு கூரப்படுகின்றது. ஏற்றுக்கொள்ளமுடியாத ஏழ்மை, தாழ்மை, எளிமையில் இறைமக்கள் கிறிஸ்து மனிதனாக அவதரித்தார். சாதாரண வறிய மனிதனுக்கு கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புக்களுக்குக்கப்பால் உலக இரட்சகர் சத்திரத்தில் தன்னை உலகிற்கு அறிமுகம் செய்கிறார். கடும் குளிரில் கந்தல் ஆடையுடன் உலகிற்கு தன்னைக் கையளிக்கின்றார்.

கிறிஸ்து பிறப்புடன் ஏழ்மையும் எளிமையும் ஏற்றம் பெறுகின்றது. பணம், பதவி, பட்டம், அதிகாரம் என்பனவற்றுடன் உலக இரட்சகரை எதிர்பார்த்த யூதர்களுக்கு இயேசுவின் பிறப்பு சாட்டையடியாக அமைந்துவிடுகிறது. இந் நிலையில் இயேசுபாலன் அக்கால சமூக வழமைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் பாலகனாகவும் அதிகாரங்களைத் தகர்த்தெறியும் குழந்தையாகவும் ஏழைகளின் நண்பனாகவும் அன்னை மடியில் தன்னை காணிக்கையாக்குகின்றார். இன்று கிறிஸ்து பிறப்பு விழவானது பணக்காரர் தம் செல்வாக்கையும் ஆடம்பரங்களையும் வெளிக்காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாகவும் ஏழைகளுக்கு கிறிஸ்மஸ் விழா திண்டாட்டமாகவும் அமைந்துவிடுகிறது.

தொடரும் யுத்தநிலைமகள் சாதாரண மனிதனைக் கூட அசாதாரண நிலைமைக்கு ஆளாக்கி விடுகிறது. இதனால் அன்றாட அடிப்படைகளைக் கூட நிறைவுசெய்ய முடியாத நிலையில் கிறிஸ்மஸ் விழா கேள்விக்குறியாக அமைத்து விடுகிறது. தள்ளாடும் சமாதானப் பேச்சுக்களும் முயற்சிக்ளும் எதிர்காலத்தை இருண்டதாக்கி விடுகிறது. ஷெல் சத்தங்களும், கைதுக்ளும் காட்டிக் கொடுப்புக்களும், கொலை மிரட்டல்களும் எமது அன்றாட வாழ்வின் நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்டது. இந்நிலையில் யூத மனப்பான்மைகளைக் களைத்து எளிமை நிறைந்த உள்ளத்துடன் தம்மை வரவேற்க பாலன் யேசு எம்மை அழைக்கின்றார்.

எனவே நவீனமயப்படுத்தப்பட்ட குழாய்களை அமைத்து விலையுயர்ந்த ஆடைகளை உடுத்து கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுவதுடன் திருப்திப்பட்டுக் கொள்ளாது, அமைதியையும் சமாதானத்தையும் குடில்களாக்கி ஏழ்மையையும் எளிமையையும் பஞ்சனையாக்கி சமத்துவம் என்றும் போர்வையால் போர்த்தி அன்பின் அரசனை அகம் மலர வரவேற்போம்.

***J. மாலினி***


# செய்தி தரும் கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்து பிறப்பு என்றதும் மனத் திரையில் வந்துசெல்லும் முக்கியமானவர்களில் ஒருவர் கிறிஸ்மஸ் தாத்தா. தாடிவைத்து, முகமூடி அணிந்து, பெரும் வயிறுடன், சிவப்பு – வெள்ளை உடையணிந்து, தோளில் பையுடன் காட்சி அளிப்பவரே இந்த கிறிஸ்மஸ் தாத்தா. உண்மையில் இவர் யார்? என பலருக்குத் தெரியாது. 4ஆம் நூற்றாண்டில் (கி.பி.) சின்ன ஆசியாவில் பிறந்தவர் நீக்கிலஸ். இவர் பிரபு குடும்பத்தைச் சேர்ந்தவர். குருத்துவத் திருநிலைப்படுத்தலின் பின், தனது செல்வங்களை ஏழைகளுக்கு பகிர்ந்துகொடுத்து விட்டு, சந்நியாச வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தார். ஆண்டவரின் பாடுகளின் மீது மிகுந்த பக்தி உடையவராக, பலஸ்தீனாவுக்குச் சென்று, ஆண்டவர் பிறந்து வளர்ந்து பாடுபட்ட இடங்களைத் தரிசித்தார். பின், சின்ன ஆசியாவில் (துருக்கி) மைநாநகரின் ஆயராக நியமிக்கபட்டார். இவர் கொடுப்பதில் நிறைவு கண்டார். தன்னிடமுள்ளதை இல்லாதோருடன் பகிர்ந்தார். இவரது உயர்ந்த வாழ்வினதும் உன்னத பணியினதும் விளைவாக புனிதராக உயர்த்தப்பட்டார். இவரைப் பற்றி பல புராணங்கள் உள்ளன. இவர் வேதகலாபனையில் உயிரிழந்த மூன்று சிறுவர்களுக்கு உயிர்கொடுத்தார். சில பெண்களுக்கு சீதனம் வழங்கி திருமணம் செய்துவைத்தார். சிறுவர்களை மிகவும் நேசித்து அன்பளிப்பு கொடுத்தார். இது மரபில் வளர்ந்து, 10ஆம் நூற்றாண்டில் 'சாந்தகுளோஸ்' (Santa Clause) என்ற பெயரில் சிறுவருக்கு பரிசில்களையும் அன்பளிப்புக்களையும் வழங்குபவராக இவர் உருக்கொடுக்கப்பட்டார்.


ஆனால், கிறிஸ்மஸ் தாத்தாவை உள்ளடக்கிய இன்றைய கிறிஸ்து பிறப்புவிழா நிகழ்ச்சிகள், இவரின் நோக்கிற்கு முற்றும் முரணான செயல்களே. அன்பளிப்பு வழங்க வேண்டிய தாத்தா அன்பளிப்புப் பெற ஆர்வம் காட்டுகின்றார். 'கரோல்' என்ற பெயரில் கிறிஸ்மஸ் தாத்தாவைப் பயன்படுத்தி அதனை இலாபமீட்டும் தொழிலாக்க முயல்வது வருத்தத்துக்குரியது. வியாபார நிலையங்கள், பெரும் நிறுவனங்கள், பொது இடங்கள் என நிதி திரட்ட கிறிஸ்மஸ் தாத்தாவுடன் பல குருக்கள் அலைந்து திரிவதும், கிறிஸ்து பிறப்பு செய்திக்கு முரணான பல ஆபாசப் பாடல்களை பாடுவதும், அர்த்தமற்ற ஆட்டங்களை ஆடுவதும் ஒரு நவீன கலாசாரமாக உருவெடுத்து எமது சமுதாயத்தை மாசுபடுத்துகின்றது.

இந்நிலை மாறி உண்மை நோக்கு உணர்ந்து , நொந்துபோன மக்களுக்கு நம்பிக்கையையும், உறுதியையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும் தாத்தாவாக கிறிஸ்மஸ் தாத்தா மாறவேண்டும். யாழ். ஆயரும் திருவருகைக்கால சுற்றுமடலில் இதனையே வலியுறுத்தியுள்ளார். களியாட்டத்துக்காக தாத்தாவை வரவழைக்காது, அமைதியிழந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு அமைதியின் செய்தியை அறிவிக்க ஒளிமயமான எதிர்கால நம்பிக்கையை எதிர்வுகூறும் நற்செய்தியை அறிவிக்க வரவழைப்போம். புனித நீக்கிலசின் அன்புப் பணி எம்மில் சுவரட்டும்.

**அருள்சகோ. அ.பீ. திருமகன்**



# கிறிஸ்மஸ் தாத்தா



**இ.ம. ஜெயசீலன்
(மறைப்போதகர்)**

கிறிஸ்மஸ் என்றாலே அனைவர் உள்ளங்களிலும் உவகை ஊற்றெடுக்கும். அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் ஒருவிழா. இறைவனின் மீட்பு நமக்கு கிடைக்கிறது என்ற ஓர் உன்னதமான மகிழ்ச்சியை இவ்விழா நமக்குத் தர வேண்டும். இவற்றை வெளிக்காட்டும் நிகழ்ச்சிகளாக அமைவன வழிபாடுகள், ஒளிவிழா, நத்தார் கீதங்கள்.

நத்தார் கீதங்கள் பாடிவரும் குழுவிடையே சிவப்பு உடையுடனும் வெண்ணிறத் தாடியுடனும் பவனி வரும் கிறிஸ்மஸ் தாத்தாவை சிறுவர் முதல் முதியோர் வரை எதிர்பார்த்துக் காத்திருப்பர். ஏனென்றால், அவர் தரும் பரிசுப்பொருட்களைப் பெறுவதற்கும் அவர் சொல்லும் செய்தியை கேட்பதற்குமே. ஆனால் அநேகருக்கு கிறிஸ்மஸ் தாத்தா யார்? ஏன் வருகிறார்? என்ற உண்மை தெரிவதில்லை, அவரை ஒரு பணம் பெறும் பிச்சைக்காரனாக, நடனமாடும் நடனக்காரனாகப் பார்க்கிறார்கள்.

மத்திய ஆசியாவிலுள்ள மீசா என்ற நகரின் பேராயராகிய புனித நிக்கொலஸ் ஏழைகள் மீது சிறுவர்கள் மீது இரக்கம் காண்பித்து ஆன்ம சரீர பிறசிநேகித ஆர்வத்துடன் சேவைகள் செய்தார். அவர் மரித்த பின் டச்சு மாலுமிகள் பல நாடுகளுக்கு சென்ற தருணங்களில் ஆயரின் பரிவிரக்கத்தை பலருக்கு அறிவிக்க அவரது திருநாளாகிய டிசம்பர் 6ஆம் நாள் சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்கினர். அவர் நினைவாக கற்பனையில் உருவான பாத்திரமே வெண்தாடியுடன் வரும் செயின்ற் நீக்கொலஸ். இப் பெயர் டச்சு மொழியிலும் வேறு மொழிகளிலும் சாந்தகிளாஸாக மருவிற்று. இந்த வெண்தா்டியுடன் வரும் சாந்தகிளாஸ் இயேசு அளிக்கும் அளவற்ற அன்புப் பரிசின் அடையாளமாக திகழ்கின்றார்.

ஆனால், வேதனை என்னவென்றால், இயேசுவின் மகிழ்ச்சி நற்செய்தியை கிறிஸ்தவர்க்கும் கிறிஸ்தவரல்லாதோருக்கும் அறிவிக்க மகிழ்ச்சியுடன் வரும் கிறிஸ்மஸ் தாத்தா இன்று எமது பங்குகளில் கோமாளியாக, பணம் தண்டும் பிச்சைகாரனாக காண்பிக்கப்படுவதும் காணப்படுவதும்தான்.

எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். ஒரு பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழாவிற்குச் சென்றிருந்தேன். அங்கு நத்தார் தாத்தா மேடைக்கு வந்தார். வந்தவர் துள்ளலிசைக்கேற்ப வயிற்றைக் குலுக்கி பலவிதமான நடனங்களை ஆடினார். சபையினர் சிரித்தனர். அதன்பின் அவருடன் பேட்டி நடைபெற்றது. அதில் கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் *ஒருசில.*

*கே. ஏன் நீங்கள் இங்கு வந்தீர்கள். இங்கு உங்களுக்கு என்ன பிடிக்கும்?*
*ப. பனம்பழம் சாப்பிடவே நான் வந்தேன்.*

*கே. உங்களுக்கு இன்று பிடித்த நபர் யார்?*
*ப. டயானா*

*கே. உங்களுக்கு பிடித்த டான்ஸ்ஸர் யார்?*
*ப. மைக்கல் ஜக்ஸன்*

இவைதான் கிறிஸ்மஸ் தாத்தா சொன்ன செய்திகள். அங்கு இந்து மாணவர்கள், ஆசிரியர்கள் நிறைந்து இருந்தார்கள். அவர்களுக்கு யேசுவின் அன்பை அல்லது பிறப்பை அவரது போதனைகளை கூறியிருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். அர்த்தமற்ற இந்த நிகழ்வுகள் தேவைதானா?

நத்தார் கீதங்கள் பாடிவரும் குழுக்களிடையே வரும் கிறிஸ்மஸ் தாத்தா கையில் பரிசுப் பொருட்களுக்குப் பதிலாக உண்டியல் பேணி வைத்திருப்பார். அவற்றை குலுக்கி பணம் கேட்டு நச்சரிப்பார். சில இடங்களில் பங்குத் தந்தையருடன் தொடர்பற்ற குழுக்கள் பணம் சேர்ப்பதற்காக கிறிஸ்மஸ் தாத்தா வேடம் போட்டு ஏதோ அர்த்தமற்ற பாடல்களைப் பாடி மக்களிடம் பணம் சேர்க்கிறார்கள். அந்தப் பணம் எவ்வாறு செலவழிக்கப்படுகிறது தெரியாது. இப்படியான குழுக்களிடம் இருந்து மக்களுக்கு கிடைக்கும் செய்தி என்ன? இந்தக் குழுக்களின் ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பது மட்டுமே.

இன்னொரு இடத்தில் இரண்டு நத்தார் கீதக் குழுக்கள் மோதிக்கொண்ட சம்பவமும் நிகழ்ந்தது. அவ் வேளை கிறிஸ்மஸ் தாத்தாக்களே தமது கைத்தடிகளால் அடிபட்டார்கள். இது தேவைதானா? புனிதமான ஒரு மனிதனைக் கொச்சைப்படுத்துவதாக இந் நிகழ்ச்சி அமைகிறது.

கிறிஸ்மஸ் கரோல் பாடல்கள் காலம் காலமாகப் பாடப்பட்டு வந்த பக்திப் பாடல்கள். அப் பாடல்களில் ஆழ்ந்த அர்த்தம் உண்டு. ஆனால் இன்று கரோல் பாடல்கள், துள்ளிக் குதித்துக் கூத்தாடக்கூடிய சினிமா இராகங்களில் ஏதோ வார்த்தைகளைப் போட்டுப் பாடுகின்றார்கள். இல்லை கத்துகிறார்கள். இவற்றை கிறிஸ்மஸ் கீதங்கள் என்று அழைக்கலாமா?

எனவே கிறிஸ்மஸ் கீதங்களை நெறிப்படுத்துவோர் கிறிஸ்மஸ் தாத்தாவின் வருகையின் அர்த்தத்தைப் புரிந்து இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் தூதுவராகவும் பிள்ளைகளை மகிழ்விப்பவராகவும் கிறிஸ்மஸ் தாத்தாவை சித்தரிப்பதே விரும்பத்தக்கதாகும். இந்த கிறிஸ்மஸ் கரோல் கீதங்களைப் பாடும் குழுவினரைப் பங்குத் தந்தையர் கவனமுடன் நெறிப்படுத்தி அவர்களை தமது பார்வையில் நிகழ்ச்சிகளை வழங்க அனுமதிக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்கிறோம்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரினால், அகதிகளாக்கப்பட்ட மக்களை தேடிச் சென்று அவர்களை மகிழ்விக்கின்ற, அவர்களுக்கு உதவிபுரிகின்ற யேசுவின் அன்பை காட்டும் செயல்களில், இவ் ஆண்டு நடைபெறும் கரோல் கீதங்கள் ஒளிவிழாக்கள் அமைவதையே எமது யாழ். ஆயரும் விரும்புகின்றார். அதற்கமைய செயல்படுவோம். கிறிஸ்து மகிழ்ச்சி செய்தியை அறிவிப்போம்.

MERRY CHRISTMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுந்துயரம் பாருமையா!

பாவியர் எமை மீட்கப் பாலகனாய்
பாருலகில் வந்துதித்தீர் பரமனே
பைந்தமிழ் நாட்டினிலே பாலகர் நாம்
படுந்துயரம் பாரீரோ!

நாயாய் நாம் அலைகின்றோம்
நாடற்று வீடற்று உறவிழந்து
நேயமுடன் வந்திடுவீர்
நீசரெமைக் காக்க இப் பூவுலகில்

மானிடரை மீட்க மாட்டுத் தொழுவத்தில்
மாரிக் குளிரினிலே மாயவனே வந்தீரோ
மக்கள் நாம் மாக்களாய் மாறிடும் இந் நிலையினிலே
மாபரனே! மாதவனே! மாந்தர் எம்மை மீட்க
மேதினியில் வந்திடுவீர் மேன்மையுடனே


பாசமதைப் பொழிந்து பாலூட்டிச் சீராட்டி
பாருலகில் வளர்த்துவிட்ட எம் பெற்றோரை
இக்கணமே இழந்துவிட்டோம்
இனி என் செய்வோம் என ஏங்குகையில்
செக்கலுக்குள் கூவியே வீழ்ந்த
ஷெல் அதனில் உறவுகளையும் இழந்துவிட்டோம்
ஓடோடி வந்தோம் உம் பாதம் தஞ்சமென
நாடோடிகள் நாம் தயவுடனே காருமையா!

– இனவையூர் விமல் –

# அந்தி வாழ்வு போக்கிடவே...

மீண்டும் பிறந்திடுவாய் – எமக்கு
மீட்பு தந்திடுவாய்
விரைந்தோடி வந்திடுவாய் – மாந்தர்
வினை தீர்க்க வந்திடுவாய்!

கண்ணீர் துடைத்திடுவாய் – எம்மை
காலமெல்லாம் காத்திடுவாய் !
உள்ளத்தில் பிறந்திடுவாய் – இயேசுவே
உடல்தனை துய்மையாக்கிடுவாய்!



உடல் ஊனம் தீர்த்திடுவாய் – ஈசனே
வன்முறைகள் அழித்திடுவாய் !
இரக்கம் காட்டுவாய் – .றைவா
இன்பம் தந்தீடுவாய்!

மாந்தர் பாவம் போக்கிடுவாய் – தேவனே
மன்னித்து அருள் கூர்ந்திடுவுாய் !
அகிலத்தில் அன்பு பெருக்கிடுவாய் – அன்பனே
ஆணவத்தை எங்கும் ஒழித்திடுவாய்!

பரமசாமி தனா
அரியாலை

# தயவு காட்டுமையா!

பாரிலே பாவமதைப் போக்க வந்த பரமனை
காரிருள் ஒளிவீச எழுந்த எம் தலைவனை,
பாருமே, வாருமே அவரடி போற்றுவோம்,
தேனிலும் இனிய எம் இயேசு பெருமானையே

நான் என்ற வட்டம் பரந்து, விரிந்து
நாம் என்ற பன்மை உலகில் திகழ
ஏன் இந்த வாதங்கள் எல்லாமே மறைய
ஏழையின் மைந்தனாய் தோன்றினார் இயேசு

பட்டம் பதவிகள், பரிதவிக்க வைத்திடும் - அது
தொட்டாற் சிணுங்கிபோல் சட்டெனச் சுருங்கும்
விட்டிற் பு,ச்சிபோல் நிலையில்லா இவ் வாழ்வை
நிலையென எண்ணி வாழாய் எந்நாளும்

எதிர்கால வாழ்விலே அவலங்கள் நீங்கிடவும்
எதிர்பார்க்கும் இலட்சியம் இன்பமாய் கிடைத்திடவும்
அயலவர் மத்தியில் அன்பியம் வாழ்ந்திடவும்
தலைவனே எழுந்திடுவாய் அருளினையே ஈந்திடுவாய்

மார்கழி மாதமதில் மலர்ந்த இயேசையா,
மானிடர் எமக்காய் அவரித்த தயாளனே,
ஏழையர் மைந்தனாய் அவனியிலே வந்தவரே
தாழ் பணிந்தோம் தயவு காட்டுமையா.

செல்வி தவம் குருசமுத்து
நவாலி

# தேடிடும் அமைதியை அருளிடும் அரசராய் வா!

மண்ணக மாந்தர் தம் மதியினை இழந்தனர்
பண்பற்று மாசுற்று மேலோனின் மகிமையை மறந்தனர்
விண்ணகத் தேவனும் பேரன்பினைச் சொரிந்தனன்
பெண்மரி கருவினில் இறைமகன் உறைந்தனன்
கண்மணி ஆவின் குடிலிடை மிளிர்ந்தது
வெண்கொடி நிழலிடை விடிந்தது விடுதலை

விடுதலை நிலைபெற விரைந்திங்கே பிறந்துவா
கொடுமைகளகன்றிட குழந்தையாம் தவழ்ந்துவா
அடிமை நாம் நிமிர்ந்தெழ ஆதவனொளியாய்வா
கொடியேந்தும் தலைமைக்கு சமாதான தூதாய்வா
தேடிடும் அமைதியை அருளிடும் அரசாய்வா
வாடிடும் எம்மினம் வளம்பெற வரம்நீ தா

வரமீந்த வள்ளல் வரைந்த வார்த்தையை வாழவா
சிரந்தாழ்த்தி பணியேற்க அணியெனவே திரண்டுவா
மரமொத்த மனங்களை மலராக மாற்றிவா
கரம் நீட்டி தவிப்போரின் விழிநீரை துடைக்கவா
தரம் பலவும் மன்னித்து மாண்புற்ற எம் யேசு
பரன் பிறந்த புனித நாளிதுவே புதுராகம் பாடிவா

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

# வரமதை நீ தந்திடையா

பரிசுத்தர் அளித்த கொடை
பாரினிலே தோன்றியது
மரியாயின் மடிதனிலே
மழலையது தவழ்கிறது!

மாட்டுத் தொழுவமதில்
மழைகாலக் குளிர்தனிலே
கூட்டுக்குள் குருவியைப் போல்
குளிர்நிலவு மலர்ந்ததன்று!

உலகிற்கு வழிகாட்ட
உண்மைக்கு உரமூட்ட
பலமற்ற மனுக்குலத்தை
பலமூட்டப் பரன் உதித்தார்!

மாபரனே இயேசு நாதா
மனமுடைந்த எங்களது
பாலவாழ்வை மாற்றியிங்கு
பாதையைச் சீர் செய்திடவா!

அடிமைகளாய் நாமிழந்து
அகதிகளாய் அலைக்கழிந்து
குடியிழந்து போதமெமைக்
குருபரனே காத்திடவா!

போர் சூழல் பூமியிலே
போதனைகள் செய்திடவா
கார்காலம் தனையகற்றி
காத்திடவா யேசுபாலா!

நத்தாராம் இந்நாளில்
நாமுமுனைப் பாடுகின்றோம்
இத்தரையில் சமாதானம்
இயங்கிடவே செய்திடவா!

எங்கள் இயேசு பாலகனே
எம்முயிரின் போசனையே
சங்கமமாம் எம் மனதில்
சாந்தியினைப் பொழிந்திடவா!

உடமைகளும் உரிமைகளும்
உடைந்தழிந்து போகையிலே
மடமையான உலகியலில்
மனமாற்றம் தந்திடவா!

கானமெல்லாம் உனைப்பாடும்
காவியமே எம் வாழ்வு
வானவராம் சேவை செய்யும்
வரமதை நீ தந்திடையா!

பாதநேர உணவு மின்றி
படுத்துறங்க இடமுமின்றி
ஏதிலியாய் அலையுமிந்த
ஏக்கவாழ்வை நீக்கிடையா!

பாலகனே பரம்பொருளே
பாருமையா எம் நிலைமை
காலமது என்றுமுந்தன்
காவலைத் தந்திடையா!

ஆ. ஜென்சன் றொனால்ட்
புனித அன்னாள் ஆலயம்,
பாண்டியந்தாழ்வு

# ஏழைக்கோலமாய் இயேசு பிறந்துவிட்டார்

இறைவன் என்றாலும் ஏழை கோலமாய்
இயேசு பிற்நது விட்டார் — எங்கும்
ஏழைகள் வாழும் வீடுகள் தோறும் ஏசு பிறந்துவிட்டார்!

சிந்தனை கொண்ட மனிதர் எல்லாம்
சினம் கொண்டு விரட்டினார் — இறை
மைந்தனை அந்த இடையர் தானே
மகிழ்வுடன் போற்றி வணங்கினார்

தாழ்த்தப்பட்டவர் வாழ்த்தை பெற்றதோடு
உயர்த்தப் பட்டாரடா — இங்கு
உயர்ந்தவர் எல்லாம் தாழ்ந்தோராவர்
உண்மைப் பாடமடா!

V.P. தனேந்திரா
அரியாலை

MERRY CHRISTMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பரஸ்பர நன்மதிப்பு நட்புறவில் கிறிஸ்தவர்களும் இந்துக்களும்"

## தீபாவளிச் செய்தி - 2000 கருதினல் பிரான்சிஸ் அரின்ஸ் தலைவ.

## மதங்களுக்கிடையிலான உரையாடலுக்கான திருத்தந்தையின் பேரவை வத்திக்கான் நகர்

*அன்புக்குரிய இந்து நண்பர்களே!*

1. மகிழ்ச்சிகரமான தீபாவளி விழாவின் போது உங்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த வாழ்த்தக்களை தெரிவிக்க விரும்புகிறேன். சிறுவராயினும் இளைஞராயினும் முதிர்ந்தோராயினும் நீங்கள் அனைவரும் ஆண்டுதோறும் இவ் விழாவுக்காக மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறீர்கள். தூய காற்றைப் போல அது உங்கள் சமய உணர்வுக்கு மீண்டும் உயிரூட்டி, உங்கள் மத பாரம்ரியத்தின் விதிமுறைகள் காட்டிய வழியில் தொடர்ந்து செல்லவேண்டும் என்ற நோக்கத்தைப் புதுப்பிக்கின்றது. இத்தகைய விழாக்கள் வெறும் சமூக நிகழ்ச்சிகளல்ல, இயல்பிலேயே மதச் சார்புள்ளவர்களான மனிதர் வாழ்வில் இறை அர்த்தமுள்ள வேளைகள் என்பது எனது நம்பிக்கை. எமது வாழ்வின் இறுதி நோக்கம் பற்றி ஆழ்ந்து சிந்திக்க தீபாவளி போன்ற விழாக்கள் ஒரு நல்ல தருணமாகும்.

2. உலகில் பரவலாகப் பின்பற்றப்படும் எமது நாள்காட்டியின்படி, கிறீஸ்தவர்களாகிய எமக்கு இது ஒரு முக்கிய ஆண்டாகும். ஏனெனில் எமது ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறீஸ்து பிறந்த 2000ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடுகின்றோம். உலகெங்கும் இது கொண்டாடப்பட்டாலும் ரோமாபுரியிலும் இயேசு பிறந்து, போதித்து, பாடுபட்டு, மரித்து, உயிர்த்த புனித நாட்டிலும் இது விசேடமாகக் கொண்டாடப்படுகிறது. இந் நிகழ்ச்சியைக் கொண்டாடும்போது இயேசு கிறீஸ்துவில் இதே விசுவாசம் கொண்டிராத மக்களை நாம் மறந்துவிடவில்லை. உண்மையில், கத்தோலிக்கத் திருச்சபையானது கிறிஸ்தவர்களுக்கும் ஏனைய மத பாரம்பரியங்களைக் கொண்ட மக்களுக்குமிடையில் ஆழமான நட்புறவை ஏற்படுத்துவதில் விசேட அக்கறை காட்டுகின்றது. ஒன்றுபட்டு நாம் உலகுக்கு அதிக நன்மைசெய்ய முடியுமென்பது எமது உறுதியான நம்பிக்கை. உதாரணமாக, இந்துமதம், கிறீஸ்தவம் ஆகிய எமது இரு சமயங்களும் தத்தமது தனித்துவமான போதனைகளுக்கமைய இறைவன் என்னும் பரம்பொருளுக்கு மனித வாழ்வில் அதியுயர்ந்த இடம் அளிக்கின்றன.

3. மூலாதாரமான உண்மையை பற்றிக் குறிப்பிடும் போது சனாதன தர்மம் கூறுகின்றது "நிலையற்றவற்றுள் நிலையானவர் உணர்கின்றவற்றுள் உணர்வுள்ளவர் பன்மையானவற்றுள் ஏகமானவர் எல்லாச் செயல்களையும் கண்காணிப்பவர் அனைத்துப் பிராணிகளிலும் வாசம் செய்பவர். சாட்சியானவர் ஈடிணையற்றவர், குணங்களற்றவர், கண்கள் அவரைக் காணமுடியாது, வார்த்தைகள் அவரை வெளிப்படுத்த முடியாது... அவரே நிறைவான முழுமை" (கதா உ.5,13 ; ஸ்வெத் உ.6,11 ; முண் உ.3,1,8; பிருஹத் உ.5,1,10)

4. இறைவனது முழுமையான மறைபொருளை இயேசு கிறீஸ்து வெளிப்படுத்துகிறார் எனக் கிறீஸ்தவர்கள் நம்புகின்றனர். அவரே "அருளும் உண்மையும் நிறைந்தவராய், மனிதனாகி நம்மிடையே குடிகொண்ட வார்த்தையானவர்.... இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம்.... அருளும் உண்மையும் இயேசுகிறீஸ்து வழியாய் வெளிப்பட்டன. கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்" (யோவான் 1:14-18) இயேசு பிறரன்பைப் போதித்தார், இரக்கம் காட்டினார். மன்னிப்பு மனப்பான்மை வேண்டுமெனக் கூறிய அவர் தம்மைக் கொலை புரிந்தவர்களை மன்னித்தார். பாவத்திலும் அறியாமையிலும் கட்டுண்டிருந்தவர்களை விடுவித்து தாமே மீட்பர் என்பதை எண்பித்தார். ஆகவே, இயேசு மனித குலத்துக்கு ஒரு முன்மாதிரியாகவும் ஒரு நிரந்தர செய்தியாகவும் இருக்கின்றார் அல்லவா?

5. இந்துக்களும் கிறீஸ்தவருமாகிய நாம், எமது பரஸ்பர நன்மதிப்பு, நட்புறவின் மூலம் இந்தியா முழுவதிலும் அதற்கப்பாலும் இசைவுக்கும் சமாதானத்துக்கும் சான்றாகவும் கண்கண்ட எடுத்துக்காட்டாகவும் விளங்க வேண்டுமென்பதே எனது மனமார்ந்த விருப்பமும் வேண்டுதலுமாகும். எம்மைச் சுழவுள்ள உலகம் குறிப்பாக அடக்கப்பட்டடோர், ஒடுக்கப்பட்டோர், மறுக்கப்பட்டோர் அநீதிக்குட்படுத்தப்பட்ட அப்பாவிகள் அனைவரும் வளர்ந்து வரும் எமது நட்பினைஉணர்ந்து கொள்வார்களாக. இந்துக்களும் கிறீஸ்தவர்களும் பரஸ்பர நன்மதிப்பிலும் புரிந்துணர்விலும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து உலகில் இசைவையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவதற்கு தமது பங்களிப்பை செய்யும்படிக்கு ஒருமித்து வளமூட்டப்படுவார்களதக திறந்த மனப்பான்மையும் உரையாடலும் எமது இரு பாரம்பரியங்களுக்குமுரிய பண்புகளாக இருந்துவந்துள்ளன.

எமது இரு மதங்களுக்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், நாம் ஒருவருக்கொருவர் நன்மதிப்புக் காட்டினால் அது எமது சொந்த வளமூட்டுதலுக்குத் துணைபுரிவது மட்டுமல்லாமல், உலகின் அனைத்து மதத்தினர்க்கும் ஒரு முன்மாதிரியாகவும் ஊக்குவித்தலாகவும் இருக்கும்.

6. திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் தாமே இறுதியாக இந்தியாவுக்குத் தாம் மேற்கொண்ட பயணத்தின் போது இவ்வாறு எமக்கு மீண்டும் கூறியுள்ளார். "கத்தோலிக்க திருச்சபையானது உலக மதங்களுடன் ஆழமான விதத்தில் உரையாடலை மேற்கொள்ள விரும்புகிறது. உரையாடலானது இறைவனிலேயே வேரூன்றிநிற்கும் ஓர் அன்புச் செயல் என அது கருதுகின்றது. "அன்பே கடவுள், அன்பில் நிலைத்திருக்கிறவர் கடவுளோடு இணைந்திருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார்.. அவரே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அன்பு செலுத்துகிறோம்.... தம் கண்முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது" (யோவான் 4:16,19-20) என புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (7நவம்பர் 1999இல் விக்கியன் பவனில் பிற மதங்கள், கிறீஸ்தவ சபைகளின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில்)

7. இதே மனப்பாங்கில் தான் நான் மீண்டும் உங்களை வாழ்த்தி; அமைதியும், சமாதானமும் நிறைந்த வாழ்வுக்காக எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். மகிழ்ச்சி நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

*கருதினால் பிரான்ஸிஸ் அரின்ஸ் - தலைவர்.*

# கிறீஸ்து அரசர் விழாவும் பொதுநிலையினர் தினமும்

## அருள்திரு பா.பி. இராஜசிங்கம்

### ஏன்?

கிறீஸ்து அரசர் விழா திருவழிபாட்டு ஆண்டின் இறுதிவழா. திருவழிபாட்டு ஆண்டில் நடைபெறும் விழாக்களுக்கெல்லாம் கொடுமுடியாக அமைவது இவ் விழாத்தான். எனவே இவ் விழாவில் பொதுநிலையினர் தினத்தை எவ்வாறு கொண்டாட முடியும்? அப்படிக் கொண்டாடுவதாயின் அதன் சிறப்பு அமசம் என்ன? இது முறையா? வேறு நாட்களில் இதனைக் கொண்டாட முடியாதா? என்ற பல கேள்விக் கணைகள் பலரிடத்திலே தொடுக்கப்பட்டன. இக் கேள்விகள் அனைத்தும் நியாயமானவைதமான். ஆனாலும் கிறீஸ்து அரசர் விழாவும் பொது நிலயினர் தினமும் ஒருங்கே கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமானதும் பொதுநிலையினர் ஒவ்வொருவரின் கிறீஸ்தவ விசுவாச வாழ்வை ஆழப்படுத்துவதாகவும் அமைகின்றது. காரணம், கிறீஸ்து இயேசுவின் முப்பணிகளான அரச, குருத்துவ, இறைவாக்குப் பணிகளில் பொதுநிலையினரான நாம் அனைவரும் பங்குகொண்டு கிறீஸ்து இயேசுவைப் போன்று ஓர் அர்ப்பண வாழ்வு வாழ கிறீஸ்து அரசர் விழா எம்மை அழைக்கின்றது.

### யார்?

"பொதுநிலையினர் என்ற சொல் குருகுலத்தாரும் திருச்சபையின் இசைவுபெற்ற துறவற நிலையினரும் நீங்கலாக ஏனைய எல்லா விசுவாசிகளையும் குறிக்கும். இவர்கள் ஞானஸ்நானத்தின் மூலம் கிறீஸ்துவோடு ஒருடலாக்கப்பட்டு, இறைமக்களாக உருப்பெறுகின்றனர். தங்களுக்கே உரித்தான முறையில் கிறீஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு உரைக்கும், அரச அலுவல்களில் பங்குகொள்கின்றனர். திருச்சபையில் கிறீஸ்தவர் அனைவரும் ஆற்றவேண்டிய பணியிலே தமக்குரிய பங்கை உலகிலே ஆற்றி வருகின்றனர். (திருச்சபை 31)

பொதுநிலையினர் அழைப்பு என்பது குருத்துவ. துறவற அழைப்புப் போன்று மேன்மையானது. ஏனென்றால் பொதுநிலையினர் அனைவரும் திருமுழக்கினால் இயேசுக் கிறீஸ்துவுக்குள் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள். "... நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தவர், அவரது உரிமைச் சொத்தான மக்கள்" (1 பேதுரு 2:9) இவர்கள் உலகைச் சார்ந்து கொண்டு, உலகில் வாழ்ந்து அதற்கு ஒளியாகவும் உப்பாகவும் திகழ வேண்டியவர்கள். நற்செய்திப் பணியில் ஆர்வம் கொண்டவர்களாக தமது உலக அலுவல்களில் ஈடுபடுவதினால் இவர்கள் புளிக்காரம் போல் உலகில் இருந்துகொண்டே அதைக் கிறீஸ்து மயமாக்கின்றனர்.

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் என்ற யேசுவின் கட்டளையை சிரமேற்கொண்டு தமது சொல்லாலும் செயலாலும் எடுத்துக்காட்டான' வாழ்வாலும் இயேசுக் கிறீஸ்துவுக்கு சாட்சியம் கூறவேண்டியவர்களும் பொதுநிலையினரே. எத்துறையில் பணியாற்றினாலும் தமது ஆற்றல்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டு, உண்மைக்கும் நீதிக்கும் ஒளிக்கும் சான்றுபகர வேண்டியவர்களும் பொதுநிலையினரே! எனவேதான் பொதுநிலை அழைப்பு என்பது குருத்துவ, துறவற அழைப்பைப் போன்று மேன்மைமிக்கது. இவ்வாறு மேன்மைமிக்க அழைப்பைப் பெற்ற பொதுநிலையினர் அனைவரும் ஒதுங்கி வாழாது தமது அப்போஸ்தலத்துவத்தின் மகிமையை உணர்ந்து தமக்கே உரியமுறையில் இயேசுக் கிறீஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு, அரச பணிகளிற் தங்களை ஈடுபடுத்தி உலகை கிறீஸ்துமயமாக்க முன்வரவேண்டும்.

### பொதுநிலையினரின் முப் பணிகள்

உலக ஈடுபாடே பொதுநிலையினரின் தனித்தன்மை. இந்த உலகியல் ஈடுபாட்டில் குறிப்பாக குடும்ப வாழ்வின் அனுபவங்கள், பணித்தள சவால்கள், சமூக சூழல் நிலவரங்கள் போன்றவற்றினூடாக பொதுநிலையினர் அருள்வாழ்வுக்கு அழைக்கப்படுகின்றனர். இவ் அருள் வாழ்வு பொதுநிலையினரின் வாழ்வில் மென்மேலும் ஆழப்படுத்த வேண்டுமானால் ஒவ்வொரு பொது நிலையினரும் கிறீஸ்துவின் முப் பணிகளான குருத்துவ, இறைவாக்குரைக்கும், அரச அலுவல்களில் முழுமையான அர்ப்பண உணர்வோடு பங்கெடுக்க வேண்டும்.

### அ. பொதுக் குருத்துவம்

பொதுநிலையினரின் பொதுக்குருத்துவம் என்பது அவர்களின் வாழ்க்கைப் பணியையே முன்குறித்துக் காட்டுகின்றது. "சகோதர சகோதரிகளே கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகின்றேன். கடவுளுக்கு உகந்த, தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு. (உரோம. 12:1) பொதுநிலையினர் அனைவரும் தங்களின் எல்லா வேலைகள், செபங்கள், அப்போஸ்தலிக்க முயற்சிகள், திருமண குடும்ப வாழ்வு, ஆன்ம உடல ஓய்வு என்பவற்றை ஆவியின் ஏவுதலில் நிறைவேற்றும் போது ஏற்படும் வாழ்வின் துன்ப துயரங்களை நல்ல மனத்தோடு

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MERRY CHRISTMAS



"ஏரோது மன்னன் இட்ட
தோர் ஆணையால்
குழந்தையைக் கொல் லக்
குவிகிறார் வீர்கள்!
அதனால் நீவிரும் அன்
னையும் மகனும்
எகிப்து நாட்டுக் இன்றே
புறப்படும்!"

இயேசு காவியம்

ஜேர்மனியில் - பிறிஸ் விங்கன்
ஆங்கிலம் வழி
தமிழில் - மு.புஸ்பராஜன்

1944ல் நத்தார் இரவு எமது வாசல் கதவு தட்டப்படுவதைக் கேட்டபொழுது, நானோ, என் அம்மாவோ எங்களுக்காககக் காத்திருந்த, அந்த அற்புத நிகழ்ச்சியைப் பற்றி எதுவுமே அறிந்திருக்கவில்லை.

அப்பொழுது எனக்கு வயது 12. ஜேர்மன் பெல்ஜிய எல்லையிலுள்ள, ஹேர்ட்ஜென் காட்டினுள் ஓர் சிறிய குடிசையில் வசித்து வந்தோம். போருக்கு முன்பு, வார இறுதியில், வேட்டைக்காக அப்பா அங்கு தங்குவார். நேசநாடுகளின் குண்டுவீச்சு விமானங்கள் அச்சென்னிலுள்ள எமது பட்டினத்தை நிர்மூலமாக்கிய போது, அவர் எம்மை இங்கு வசிக்க அனுப்பினார். 4 மைல் தொலைவிலுள்ள மொன்சாயு என்னும் எல்லை நகரத்திற்கு தீயணைக்கும் மக்கள் பாதுகாப்பு அணிக்கு அவர் செல்லுமாறு பணிக் கப்பட்டிருந்தார்.

"காட்டில் நீங்கள் பாதுகாப்பாயிருப்பீர்கள். அம்மாவைக் கவனாகப் பார்த்துக்கொள். இப்பொழுது நீ தான் குடும்பத்திற்கு பொறுப்பாகவுள்ள ஆண்பிள்ளை"

நத்தாருக்கு 9 நாட்களுக்கு முன்பு ஜேர்மன், பீல்ட் மார்ஷல் ரண்ஸ்ட் ரெட் மூர்க்கமான இறுதித் தாக்குதலை ஆரம்பித்தார். இப்பொழுது நான் கதவை நோக்கிச் சென்றபொழுது, எங்களை சுற்றி பல்ஜ் யுத்த களம் அல்லோல கல்லோலப்பட்டது. யுத்தகள துப்பாக்கிகளின் இடைவிடா முழக்கங்களும் உயரத்தில் தொடர்ந்து பறந்த விமானங்களின் இரைச்சல்களும் கேட்கின்றன. இரவில் றோச் லைற்றுக்களின் ஒளி இருளை ஊடுருவுகின்றது. அண்மையில் ஆயிரமாயிரம் ஜேர்மன் – நேசநாட்டுப் போர் வீரர்கள் மடிந்து கொண்டிருந்தார்கள்.

முதல் கதவைத் தட்டும் சத்தம் வந்ததுடன், அம்மா விரைவாக மெழுகுவர்த்தியை ஊதி அணைத்தாள். பதில்கூற விரைந்த பொழுது, எனக்கு முன்பாக அவள் வந்து, கதவைத் தள்ளித் திறந்தாள். வெளியே ஆவிகளைப் போன்று, பனி உறைந்த மரங்களுக்கு எதிரே, உருக்குத் தொப்பி அணிந்த இருவர் நின்றனர். அவர்களில் ஒருவன் புரியாத மொழியில் அம்மாவுடன் கதைத்தான். பனியில் விழுந்த கிடந்த மூன்றாமவனைச் சுட்டிக்காட்டினான். இவர்கள் அமெரிக்கப் போர் வீரர்கள் என நான் உணர்வதற்கு முன் அம்மா உணர்ந்து கொண்டாள் எதிரிகள்.

அம்மா அசைவற்று, மௌனமாய் நின்றாள். அவள் கை என் தோள்மேல் இருந்தது. அவர்கள் ஆயுதங்கள் வைத்திருந்தார்கள். பலவந்தமாய் உள்ளே நுழைந்திருக்க முடியும். அங்கேயே நின்றுகொண்டு கண்களால் வினாவினார்கள். காயமுற்றவன் உயிருடன் என்பதைவிட இறந்தவன் போல் காணப்பட்டான். இறுதியில்,

"உள்ளே வாருங்கள்". அம்மா சொன்னாள்.

அப் போர் வீரர்கள் காயம்பட்ட தமது தோழனைத் தூக்கிக் கொண்டு, உள் நுழைந்து எனது படுக்கையில் அவனைக் கிடத்தினார்கள்.

அவர்கள் ஒருவருக்கும் ஜேர்மன் மொழி புரியவில்லை. அம்மா பிரெஞ்சு மொழியில் பேசிப் பார்த்தாள். ஒரு போர் வீரனுக்கு அம் மொழியில் உரையாட முடிந்தது. காயம்பட்ட வீரனைப் பார்வையிட்ட அம்மா என்னை நோக்கி "அவர்களில் இருவர் விரல்கள் மரத்துப் போய்விட்டது. அவர்கள் மேல்கோட்டையும், சப்பாத்தையும் கழற்றிவிட்டு, ஒரு வாளியில் தண்ணீர் கொண்டுவா" என்றாள். விரைந்து அவர்களது நீலம் பாய்ந்த பாதங்களை பனிக்கட்டியினால் உரஞ்சினேன்.

வாட்டசாட்டமான, கறுத்த மயிருடையவன் ஜிம். அவனது மெலிந்த உயர்ந்த நண்பன் றொபின். காயம்பட்டவன் ஹரி என அறிந்துகொண்டோம். காயம்பட்டவன் எனது படுக்கையில் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் முகம் வெளியேயுள்ள பனிக்கட்டி போல் வெளிறியிருந்தது.

அவர்கள் தமது படைப்பிரிவைத் தவறவிட்டு 3 நாட்களாகக் காட்டில் தமது அமெரிக்க தோழர்களைத் தேடியும் ஜேர்மனியருக்கு ஒளித்தும் அலைந்திருக்கிறார்கள். அவர்கள் கனத்த மேல் கோட் இல்லாமலும், முகச் சவரம் செய்யப்படாமல் இருந்தும் பார்வைக்கு பெரிய பையன்கள் போல் காணப்பட்டார்கள். அம்மாவும் அவ்விதத்திலேயே அவர்களுடன் பழகத் தொடங்கினாள்.

"போ!, கோர்மனைக் கொண்டு வா. அத்துடன் 6 உருளைக்கிழங்கையும் எடுத்து வா" என்றாள் அம்மா.

இது எமது நத்தாருக்கான் திட்டத்திலிருந்து முக்கிய திருப்பமாக இருந்தது. கோர்மன் என்பது ஒரு கொழுத்த சேவல்.

(ஹிட்லரின் 2ஆவது கையாளும், அம்மாவுக்கு விருப்பமில்லாதவருமான கேர்மன் கோரிங்கையே பட்டப்பெயராக வைத்தாள்) நத்தாருக்கு இங்கு எமது தந்தை வருவார் என்ற நம்பிக்கையில் வாரக் கணக்கில் அச் சேவலைக் கொழுக்க வைத்தோம். ஆனால், அவர் வரமாட்டார் என்பது சற்று நேரத்திற்கு முன்பு தெளிவாகியது. அப்பா இனி புதுவருடத்திற்கே வருவார். கோர்மன் இன்னும் சில நாட்களே உயிர் வாழும். எனவே அம்மா தன் மனதை இப்பொழுது மாற்றிக் கொண்டாள். கோர்மன் இந்த அவசியமான தேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டது..

ஜிம்மும் நானும் சமையலுக்கு உதவியாக இருந்தவேளை, றொபின், ஹரியைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவனது மேல் தொடையை துப்பாக்கிச் சன்னம் துளைத்திருந்தது. இரத்தப் பெருக்கினால், கிட்டத்தட்ட மரணமானவன் போலிருந்தான். அம்மா பெட்சீற்றை நீளத் துண்டுகளாகக் கிழித்து பண்டேஜ் போல் சுற்றியிருந்தாள்.

விரைவில் வறுபட்ட சேவலின் மணம் அறையை நிறைத்து ஆசையூட்டியது. நான் மேசையை ஒழுங்குபடுத்திய வேளை மீண்டும் கதவு தட்டப்பட்டது. இன்னும் சில வழி தவறிய அமெரிக்கர்களை எதிர்பார்த்து கதவு திறந்தேன். இவ் ஐந்து வருட யுத்த வாழ்வில் எமக்கு மிகவும் பரிச்சயமான யூனிபோம் அணிந்தபடி 4 போர் வீரர்கள் நின்றிருந்தனர். தற்பாதுகாப்புப் படை – ஜேர்மனியர்கள்.

பயத்தினால் ஸ்தம்பித்துப் போனேன். எதிரிப் போர் வீரர்களுக்கு தங்க இடம் கொடுப்பது தேசத் துரோகம் என்ற கடுமையான சட்டத்தை குழந்தையாயிருந்தும் அறிந்திருந்தேன். நாங்கள் எல்லோரும் சுட்டுக்கொல்லப்பட முடியும். அம்மாவும் பயந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது. வெளியே வந்து அமைதியாகக் கூறினாள். "நத்தார் வாழ்த்துக்கள்" அப் போர் வீரர்களும் நத்தார் வாழ்த்துக்கள் கூறினர்.

"நாங்கள் எமது படைப்பிரிவைத் தவறவிட்டுவிட்டோம். விடியும்வரை இங்கு தங்க விரும்புகிறோம்." கோப்றல் விளக்கினான், "நாங்கள் இங்கு தங்க முடியுமா?"

"நிச்சயமாக." பயத்தினால் பிறக்கும் உறுதியான அமைதியுடன் அம்மா கூறினாள். "நீங்கள் கூட சூடான, சுவையானசாப்பாட்டை பானை முடியும் வரை சாப்பிடலாம்." பாதி திறந்திருந்த கதவின் வழியே வந்த நறுமணத்தை நுகர்ந்தபடி ஜேர்மனியர்கள் முறுவலித்தார்கள்.

ஆனால்.... அம்மா உறுதியுடன் தொடர்ந்தாள். "நாங்கள் வேறு 3 விருந்தாளிகளைக் கொண்டிருக்கிறோம். அவர்களை நீங்கள் நண்பர்களாகக் கருதுவதில்லை...."

நான் எப்போதும் கேட்டிராத வகையில் அவள் குரல் இப்பொழுது கடுமையாகியது. "இது நத்தார் இரவு. இங்கு துப்பாக்கி பிரயோகம் கூடாது."

"உள்ளே யார்?" கோப்றல் அதிகாரத்துடன் கேட்டார்.

"அமெரிக்கர்களா?"

காட்டுக் குளிரில் சில்லிட்ட முகங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தாள் அம்மா. மிக மெதுவாகக் கூறினாள்.

கேளுங்கள். நீங்கள் எனக்கு எவ்வாறு மகன்களோ, அவ்வாறு அவர்களும் எனக்கு. இங்கு ஒரு பையன் துப்பாக்கிச் சூட்டில் காயமுற்று உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான். அவனது இரு நண்பர்களும் உங்களைப் போலவே பசியுடன் களைத்துப் போயுள்ளனர் .... இந்த ஓர் இரவு.

அவள் கோப்றல் பக்கம் திரும்பி, தன் குரலினைச் சற்று உரத்து...

"இது நத்தார் இரவு. நாம் கொல்வதனை மறந்துவிடுவோம்."

கோப்றல் அவளை முறைத்துப் பார்த்தான். 2 அல்லது 3 விநாடிகள் முடிவற்ற அமைதி. அம்மா தயக்கத்தினை ஒரு முடிவுக்கு கொண்டுவந்தாள்.

"கதைத்தது போதும்" கைகளைத் தட்டியபடி கடுமையாக உத்தரவிட்டாள்.

"தயவுசெய்து உங்கள் ஆயுதங்களைக் இங்கே விறகுக் குவியலில் வையுங்கள். சீக்கிரம். மற்றவர்கள் இரவுச் சாப்பாட்டை முடிக்கு முன்னர் நாம் விரைவோம்."

என்ன ஆச்சரியம். அந்த 4 போர் வீரர்களும் தமது ஆயுதங்களை கதவுக்குச் சற்று உள்ளிருந்த விறகுக் குவியலின் மேல் வைத்தார்கள். 3 சிறிய இயந்திரத் துப்பாக்கிகள், 1 சாதாரண இயந்திரத் துப்பாக்கி, 2 பசூக்காகள். அந்தவேளை அம்மா ஜிம்மிடம் பிரெஞ்சு மொழியில் விரைவாகப் பேசினாள். அவன் ஆங்கிலத்தில் ஏதோ சொன்னான். அந்த அமெரிக்கப் போர் வீரர்கள் தமது ஆயுதங்களை அம்மாவிடம் நீட்டியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இப்பொழுது அச் சிறிய அறையுள் ஜேர்மனியரும் அமெரிக்கரும் தம் முழங்கைகளை இறுகத் தேய்த்துக் கொண்டனர். அம்மா உண்மையில் மனோதிடம் உள்ளவள். தன் புன்னகையை இழந்துவிடாமல், ஒவ்வொருவருக்குமுரிய ஆசனத்தைத் தேடினாள். எம்மிடம் 3 கதிரைகளே உண்டு. ஆனால், அம்மாவன் கட்டில் பெரியது. அதில் புதிதாய் வந்த இருவரை ஜிம்மிற்கும் றொபினுக்கும் அருகருகாகப் போட்டாள்.

இந் நெருக்கமான சூழலில், அம்மா இரவுச் சமையல் தயாரிக்கச் சென்றாள். ஆனால், கோர்மன் இனிப் பெரிதாக வளர முடியாது. இப்பொழுது இன்னும் மேலதிக 4 பேருக்கு உணவிட வேண்டும்.

"விரைவாக" என்னிடம் இரைந்தாள் அம்மா.

"இன்னும் மேலதிக உருளைக்கிழங்கையும் கொஞ்சம் ஓட்ஸ்சையும் கொண்டுவா! இந்தப் பையன்கள் பசியாயுள்ளனர். *பசி உள்ளவன் கோபம் உள்ளவன்*"

நான் சாமான்கள் தேடும் அறையுள் தேடும்பொழுது ஹரி முனகுவதைக் கேட்டேன். திரும்பியபொழுது, ஒரு ஜேர்மனியன் தன் கண்ணாடியை அணிந்து அமெரிக்கனின் காயத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

"நீ வைத்தியப் பிரிவைச் சேர்ந்தவனா?" அம்மா கேட்டாள்.

"இல்லை. ஆனால் சில மாதங்களுக்கு முன்வரை கெய்ட்டில்பேக்கில் வைத்தியம் படித்தேன். குளிருக்கு நன்றி சொல்ல வேண்டும்."

அவன் அந்த அமெரிக்கனிடம் தெளிவான ஆங்கிலத்தில் சொன்னான்.

"ஹரியின் காயத்தில் ஏற்புத் தாவவில்லை. அதிக இரத்தம் வெளியேறியதனால் துன்பப்படுகிறான்" அவன் அம்மாவிற்கு விளக்கினான்.

இவருக்கு என்ன தேவையெனில் போஷாக்கு உணவும் ஓய்வுமே"

சந்தேகம் நீங்கி ஆறுதல் பிறந்தது. எனக்கும் கூடத்தான். நாங்கள் எல்லோரும் ஒன்றாய் உட்கார்ந்திருந்தபொழுது பார்ப்பதற்கு அவர்கள் எல்லோரும் மிக இளமையாய் இருந்தார்கள். கெய்ன்சுக்கும் வில்லிக்கும் 16 வயது இருவரும் கொலொஜ்கேள்ளைச் சேர்ந்தவர்கள். ஜேர்மன் கோப்றலுக்கு வயது 23. அவரே எல்லோரிலும் வயது கூடியவர். அவரது உணவுப் பையிலிருந்து ஒரு போத்தல் சிவப்பு வைனை எடுத்தார். கெய்ன்ஸ் ஒரு தானிய ரொட்டியை தேடி எடுத்தார். அம்மா அவற்றை சிறு துண்டுகளாக வெட்டி இரவு உணவுடன் பகிர்ந்தளிப்பதற்காக எடுத்த வைத்தாள். அரைவாசி வைனை காயமடைந்தவனுக்காக எடுத்து வைத்தாள்.

பின்பு, அம்மா இரவு உணவு நன்றிச் செபம் சொன்னாள். அவள் கண்களில் நீர் நிறைந்திருந்ததைக் கவனித்தேன். அவள் பழைய, தனக்கு பழக்கமான வார்த்தையைச் சொன்னாள். *"ஆண்டவராகிய யேசுவே வருக! எம் விருந்தினராய் இரும்"* சுற்றிவரப் பார்த்தேன். யுத்தத்தில் களைத்த அந்த முகங்களின் கண்களில் நீர் நிறைந்திருந்ததை நான் கண்டேன். சிலர் அமெரிக்காவிலிருந்தும் சிலர் ஜேர்மனியிலிருந்தும் வந்தவர்கள். எல்லோரும் வீட்டிற்கு வெகுதொலைவில் இப்போது.

நள்ளிரவிற்குச் சற்றுமுன் அம்மா வாசலுக்குச் சென்றாள். பெத்திலேமின்

(தொடர்ச்சி... அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எமது மக்கள் நொந்துபோனாலும் உடைந்துபோகவில்லை"

## அருள்திரு P. ஜேசுநேசன்



அமலமரித் தியாகிகளின் ஆசிய - ஓசியானியா பிராந்திய பொது ஆலாசகரான (General Councillor for Asia - Oceania) அருள்திரு P. ஜேசுநேசன் அடிகளார் அண்மையில் யாழ். நகர் வந்தபோது எமது பாதுகாவலன் பத்திரிகையின் யாழ். நகர் விசேட நிருபர் அவரை செவ்வி கண்டார். தமக்கேயுரிய பாணியில் சிரிப்போடு ஆங்கிலத்திலும் தமிழிலும் கலந்து அவர் தந்த பேட்டியினை இங்கே பிரசுரிக்கிறோம்.

**கேள்வி :** 1998ஆம் ஆண்டு தாங்கள் இப் பொறுப்பை ஏற்ற பின்னர், பாதுகாவலன் பத்திரிகை சார்பாக தங்களை சந்திக்க முடியவில்லை. இப்போது தங்கள் பணி பற்றி சற்று விளக்கம் தருவீர்களா?

**பதில் :** எமது சபையின் கடந்த பொதுமகாநாட்டின் (General Chapter) பின்னர் எனது இப் பணி பற்றிய நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஓரளவுக்கு பணியின் வசதிக்காக மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்று கூடக் கூறலாம். அதாவது தலைமைப்பீடத்திற்கும் பிரேதச பீடங்களுக்கும் இடையிலான ஒரு தொடர்பாளர் பணியினையே இது கொண்டுள்ளது.

General Councillor - பொது ஆலோசகர் என்று ஒவ்வொரு பிரதேசத்துக்குமாக 06 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எங்களது பணி பொதுவாக 2 வகைப்படுத்தப்படும். ஒன்று முழு அமலமரித் தியாகிகள் சபைக்குமான பணி அடுத்தது பிரதேச அமலமரித் தியாகிகள் சபைக்கான பணி. அதாவது முழு அமலமரித் தியாகிகள் சபையின் அமைப்பிற்கும் செயற்பாட்டிற்கும் நாம் பங்களிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எமது பிரதேச அமலமரித் தியாகிகள் சபைக்கான பணியை நாம் இரு வகைப்படுத்தலாம். ஒன்று தலைமையகத்திலிருந்தே பிரதேசங்கள் நோக்கிய நகர்வு. (Generalate to the region) இது தலைமைப்பீடம், பிரதேச பீடங்கள் மட்டில் கொண்டுள்ள கவனத்தையும் கரிசனையையும் தீர்மானங்களையும் தலைமையகத்திலிருந்து பிரதேசங்களுக்குத் தெரிவிப்பது.

இரண்டு பிரதேசங்களிலிருந்து தலைமையகம் நோக்கிய நகர்வு. (From the region to the generalate) இது பிரதேசவாரியாக அவர்களுடைய தேவைகள், சவால்கள், பிரச்சினைகள் என்பவற்றை தலைமையகத்திற்கு பிரஸ்தாபித்து உதவி செய்வது. இப் பணியில் Animation & Assistance - நெறிப்படுத்துதலும் உதவுதலும் முக்கியமானது. இதனை Administration - நிர்வகித்தல் எனத் தவறாக விளங்கக் கூடாது.

இந்த நெறிப்படுத்துதலில் ஒவ்வொருவரையும் அவர்கள் பங்குகளிலிருந்தாலென்ன நிறுவனங்களிலிருந்தாலென்ன பதவி வகிப்பவர்களாக இருந்தாலென்ன தனிப்பட்ட விதமாக சந்தித்து உரையாடி வழிநடத்துவதாகும்.

உதவுதல் பணியில் பிரதேசங்களுக்கு விசேட விதத்தில் ஆட்களும் உதவிகளும் தேவைப்படும்போது தேவையான ஆட்களையும் உதவிகளையும் வெளியிடங்களிலிருந்து செய்தல். மற்றும் முக்கிய பிரச்சினைகள் ஏற்படும்போது உதவி செய்தலும் இதில் அடங்கும்.

இதனைவிட Colaboration - ஒத்தியங்கல் என்று ஒரு பணியும் உண்டு. அதாவது பிரதேசவாரியான மாகாணங்களுக்கிடையில் (Facilitate) செயற்பாடுகளை இலகுவாக்கல் என்பதாகும். இப் பணியில் ஒரு மாகாணத்திற்கும் இன்னொரு மாகாணத்திற்கும் இடையில் சுமுகமான உறவையும் செயற்பாடுகளில் இலகு நிலையையும் அமைத்துக்கொடுக்கும் நடுநிலையாளராக செயல்படுதல் ஆகும்.

**கேள்வி :** தாங்கள் மாகாண முதல்வராக நியமிக்கப்பட்டு உரிய காலத்தை முடிக்கு முன்னரே இன்னுமொரு உயர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டு உள்ளீர்கள். மாகாண முதல்வர் தேர்தல் முறைகளை பற்றி சற்று விளக்க முடியுமா?

**பதில் :** ஆலோசகர்களையும் மாகாண முதல்வர்களையும் நியமிப்பதற்கு தேர்தல் முறையே கடைப்பிடிக்கப்படுகின்றது. இதில்கூட பொது ஆலோசகருடைய பணி முக்கியத்துவம் பெறுகின்றது. அவர் தேர்தல் நடக்கவிருக்கும் பகுதிக்கு வந்து ஒவ்வொருவரையும் தனிப்பட்டவிதமாக சந்தித்து உரையாடி அவர்களின் விருப்பு வெறுப்புக்களையும் ஆசை அபிலாசைகளையும் கேட்டு அறிந்துகொள்வார். இதன் பின்னர்தான் வாக்கெடுப்பு நடாத்தப்படுகின்றது. இது கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு முறையாகும். இந்த கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு முறையை வைத்து மாகாணத்தின் தேவையையும் எதிர்காலத்தையும் கருதி, ரோமாபுரி தலைமைப்பீடம் முடிவுகளை எடுக்கும்.

பொது ஆலோசகருடைய பணியை இன்னும் தெளிவாக விளக்குவதற்கு புதிய நூற்றாண்டில் நாம் செய்ய இருக்கின்ற Re-evaluation of Ministries பணிகளை மீளாய்வு செய்தல் என்ற திட்டத்தை விளக்கலாம். எமது கடந்த பொதுமகாநாட்டின் பின் 3ஆம் நூற்றாண்டுக்கு எமது சபையை உலகளாவிய ரீதியில் தயார்படுத்துவதற்கு இத் திட்டத்தை தீட்டியிருக்கிறோம். இதனை உரியவிதமாக செயல்படுத்த உழைப்பது பொது ஆலோசகருடைய பணியாகும்.

**கேள்வி :** தங்களின் யாழ்ப்பாண வருகையை எல்லோரும் விடுமுறைக்கான ஒரு வருகையாகவே கருதுகிறார்கள். உங்களோடு இவ்வளவு நேரம் பேசியதிலிருந்து இது விடுமுறைக்கான ஒரு வருகையாக எனக்குப் படவில்லை. என்ன சொல்கிறீர்கள்?

**பதில் :** என்னுடைய யாழ்ப்பாண வருகையை விடுமுறைக்கு மட்டும் வந்த வருகை என நினைக்க வேண்டாம். இது பணியும் விடுமுறையும் கலந்த ஒரு வருகை. எனது பணி ஆசியா - ஓசானியா என்ற பிரதேசத்திற்குரியது. இதில் ஆசியா அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, ரகிட்டி ஆகிய பிரதேசங்களை உட்படுத்திய 15 நாடுகளை உள்ளடக்கப்படும். இங்கு ஏறக்குறைய 600 அமல மரித்தியாகிகள் பணியாற்றுகின்றனர். உண்மையிலே, பார்க்கின்றபோது இவ் இடங்களை இணைக்கின்ற தூரங்களைக் கணக்கெடுக்கின்ற வகையில் இது ஒரு மிகப் பெரிய பிரதேசம் ஆகும்.

இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை இந்த நாடுகளிலுள்ள அமலமரித் தியாகிகளின் நிலைகளை (OMI Units) சந்திக்க திட்டமிட்டிருக்கிறேன். டுக்மெனிஸ்தானைத் தவிர மற்றைய எல்லா இடங்களையும் தரிசித்து முடித்துவிட்டேன்.

**கேள்வி :** அப்படியாயின் தங்களின் பணி எப்போதும் நகர்ந்து கொண்டிருக்கும் பணியா? தங்களுக்கு நிலையான ஒரு அலுவலகம் எங்குள்ளது?

**பதில் :** எனது நிலையான அலுவலகம் உரோமை தலைமைக் காரியாலயம். அங்கு ஒருவரிடத்தில் ஏறக்குறைய பகுதி பகுதியாக 5 மாதங்கள் மட்டுமே நிற்பேன். இதனைவிட பிரதேச செயலகம் (Regional base) ஒன்றினையும் நாம் வைத்திருக்க வேண்டும். கொழும்பிலுள்ள அமலமரித் தியாகிகளின் மசனட் இல்லத்தில் இந்த பிரதேச செயலகத்தை அமைத்து வருடத்தில் 3 தடவை மாத்திரம் அங்கு தங்கியிருப்பேன்.

**கேள்வி :** யாழ்ப்பாண வருகை பற்றி குறிப்பாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில் :** எனது இந்த வருகை யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கப்புத்தளை என்ற வரிசையில் அமையும். மாசி மாதத்தில் ஏற்கனவே வன்னிப் பிரதேசத்தை தரிசித்துள்ளேன். இந்த தரிசிப்பின் போது ஒவ்வொருவரையும் தனிமையாகவும் நிறுவனங்களை குழுவாகவும் சந்திப்பேன். இந்த சந்திப்பின்போது பரிமாறப்படும் விடயங்கள் இரகசியமாகவே இருக்கும். இது ஒரு சகோதர ரீதியான (fracternal) சந்திப்பு. அதிகாரத்தை அல்ல அன்பையே இங்கு பகிர்ந்துகொண்டு அவர்கள் தனிப்பட்ட ரீதியாகவும் குழுவாகவும் வளரவும் பணியாற்றவும் உதவி செய்வேன்.

**கேள்வி :** யாழ்ப்பாணம் இன்னும் போர் மேகங்கள் சூழ்ந்த ஒரு பூமியாகவே உள்ளது. தற்போதைய யாழ்ப்பாண நிலைகளை பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில் :** அமலமரித் தியாகிகள் வாழ்கின்ற உலகின் பல பாகங்களையும் சுற்றிப் பார்த்து நடக்கும் நிகழ்வுகளை நேரடியாக அறிந்த பின்னர் எமது நாட்டில் குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் நடக்கின்ற போரினைப் பார்க்கின்றபோது ஒரு உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்கின்றேன். எமது மக்கள் தாங்கமுடியாத துன்ப துயர அனுபவத்தில் இருந்தாலும் உறுதியாகவே இருக்கிறார்கள். எப்படியிருக்கிறீர்கள்? என்று கேட்கின்றபோது யாருமே "ஐயோ சுவாமி சாகப் போகிறோம் சாப்பிட வழியில்லை. இனித் தாங்க முடியாது" என்று சொல்லவில்லை. "சுகமாயிருக்கிறோம் இடம்பெயர்ந்துபோய் இருக்கிறோம் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என்று மட்டும்தான் சொல்லுகிறார்கள். இது எமது மக்கள் நொந்துபோனாலும் உடைந்து போகவில்லை என்பதையே காட்டுகின்றது. மன நம்பிக்கைகளை இழக்காத வகையில் இப் போராட்ட காலத்திலும் எம்மாலான முழுமையையும் செய்வோம் (Do the maximum) என்ற துணிவுடனேயே மக்கள் இருக்கின்றார்கள். போர் நடக்கின்றபடியால் ஒன்றும் செய்யமுடியாது என்று சாட்டு சொல்லிக் கொண்டிருக்காமல் போரின் மத்தியிலும் எவ்வளவு செய்ய முடிமோ அவ்வளவையும் செய்வோம் என்ற மன உறுதியோடும் வைராக்கியத்தோடும் இருப்பது நம்பிக்கை தருவதாக இருக்கிறது. இதனை மக்களிடம் மட்டுமல்ல, திருச்சபையிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. மரணத்தின் மத்தியில் வாழ்க்கை (Life admits death) என்பது இதுதான் என புரிந்துகொள்கிறேன்.

இத் தடவை என்றாலும் பேச்சுவார்த்தை நிரந்தர அமைதியில் முடியவேண்டும் என்று பலரும் வைத்திருக்கிற நம்பிக்கையில்தான் நானும் பங்கெடுத்துக் கொள்கின்றேன். அதனைத் தான் என்னுடைய வேண்டுதலுமாக்கிக் கொள்கின்றேன்.

## பகைமையிலும் .... (சிறுகதை தொடர்ச்சி)

நட்சத்திரத்தைப் பார்ப்பதற்கு தன்னுடன் சேருமாறு எம்மை அழைத்தாள். ஹரியைத் தவிர நாங்கள் எல்லோரும் அவள் அருகே நின்றோம். ஹரி தூங்கிக் கொண்டிருந்தான். அந்த அமைதியான வேளையில் வானத்திலுள்ள மிகப் பிரகாசமான நட்சத்திரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தோம். யுத்தமோ வெகு தொலைவில். கிட் டத்தட்ட மறக்கப்பட்டுவிட்டது.

எமது பிரத்தியேக தற்காலிக போர் ஓய்வு. மறுநாள் காலை வரை தொடர்ந்தது. ஹரி அதிகாலையில் எழுந்தான். அம்மா ஊட்டிய விறாத்தைப் பருகினான். காலையில் தைரியமாகக் காணப்பட்டான். எம்மிடம் எஞ்சியுள்ள ஒரே முட்டை, கோப்பி, ரலின் வைன், கொஞ்சச் சீனி இவைகளிருந்தும் பலமூட்டும் பானம் ஒன்றைத் தயாரித்தாள். ஏனையோருக்கு ஒட்ஸ்சே உணவு. அதன்பின் 2 தடிகளும் அம்மாவின் நல்ல முசை விரிப்பும் சேர்ந்து ஹரிக்கான ஸ்ரெச்சரானது.

கோப்றல் இவ் அமெரிக்கர்கள் எவ்வாறு தங்கள் பிரிவைக் கண்டறியும் விதம் பற்றிக் கூறினான். ஜிம்மின் வரைபடத்தைப் பார்த்து ஒரு அருவியைச் சுட்டிக்காட்டி,

"இவ் வழியால் தொடர்ந்து செல்லுங்கள். ஒன்றிணைக்கப்படும் முதலாவது படையை ஆற்றின் மேற்குப் பகுதியில் நீங்கள் சந்திக்கலாம்."

வைத்திய மாணவன் இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தான்.

"நாங்கள் மொன்சேயுவை நோக்கி ஏன் செல்லக்கூடாது." – ஹரி கேட்டான்.

"இல்லை, மொன்சேயவை நாங்கள் மீண்டும் கைப்பற்றி விட்டோம்". – கோப்றல் விளக்கினான்.

அம்மா இப்பொழுது எல்லோரது ஆயுதங்களையும் திருப்பிக் கொடுத்தாள்.

"கவனமாக இருங்கள். குழந்தைகளே! இன்னும் கொஞ்ச நாட்களில் நீங்கள் உங்கள் சொந்த வீட்டில் இருக்க வேண்டும் என விரும்புகிறேன். கடவுள் உங்கள் எலலோரையும் ஆசீர்வதிப்பாராக!"

ஜேர்மனியரும் அமெரிக்கரும் கைகளைக் குலுக்கிக் கொண்டனர். எதிர் எதிர் திசைகளில் அவர்கள் சென்று மறைவதை நாம் பார்த்துக் கொண்டு நின்றோம்.

நான் வீட்டிற்குள் திரும்பியவேளை, அம்மா எங்கள் குடும்ப பைபிளை எடுத்தாள். அவளது தோளுக்கு மேலால் கண்ணோட்டினேன். நத்தார் கதையில் அவை ஆரம்பமாகியது. வைக்கோலில் பிறந்ததும் எப்படி மூவிராசாக்கள் வெகு தொலைவிலிருந்து தங்கள் பரிசுப் பொருட்களுடன் வந்தார்கள் என்பதும் மத்தேயு 2:12ன் கடைசி வரிகளை அவள் விரல் சுட்டியது. "அவர்கள் வேறு வழியாக தங்கள் சொந்த நாட்டிற்குப் போய்விட்டார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிய வாழ்வே நற்கருணை வாழ்வின் வெளிப்பாடாகும்

அருள்திரு C.J. அன்ரனிபாலா

தொடர்ச்சி ...

எமது உள்ளங்களைப் பொறுத்தவரை கடின மனங்கள் கரைவது அவசியம். மனமாற்றத்திற்கு ஊதாரி மைந்தன் காணப்பட்டது போன்று, உறுதியான தீர்மானம் அவசியம். சக் கேயுவிடம் காணப்பட்டது போன்று பாவப்பரிகாரம் செய்வது அவசியம். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை, நீதி, நேர்மை, அயலவரை மதிக்கும் தன்மை, ஒருவரை ஒருவர் ஏற்று அயலவருக்காக வாழும் தன்மை என்பவற்றை உணர்ந்து மனத்தாங்கல் உள்ளவரோடு நேரடியாக சென்று உரையாடுவதுடன் ஒப்புரவு அருட்சாதனத்தை அடிக்கடி பெற்று எம்மைத் தூய்மையாக்கி வாழ வேண்டும். எமது விசுவாச வாழ்வு இன்றியமையாத கிறிஸ்தவ மதிப்பீடுகளின் மீது கட்டப்பட்டுள்ளதா? அல்லது வெளிப்பகட்டின் மீது கட்டப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். எமது விசுவாச வாழ்க்கையை ஆழப்படுத்த மிகவும் இன்றியமையாத அருட்சாதன, திருவழிபாட்டு, சிறப்பாக திருப்பலிக் கொண்டாட்டங்களுக்கும் உள்ளார்ந்த அமைதி தரும் தியானப் பயிற்சிகளுக்கும் செபவாழ்வுக்கும் முன்னுரிமை கொடுத்து அத்தியாவசியம் இல்லாதவற்றைக் களைய முற்படவேண்டும். எமது விசுவாசம் புதுப்பிக்கப் பெற்று விசுவாசவாழ்வு ஆழப்படுத்தப்பட வேண்டும்.

## நற்கருணைப் பலி

எமது இல்லங்களைப் பொறுத்தவரையில் நற்கருணையை மையமாகக் கொண்ட தியாகப் பலிவாழ்வும், அப் பலிவிருந்தின் ஒற்றுமை வாழ்வும் எமது குடும்பங்களில் வாழப்படவேண்டும். இதற்குப் பிள்ளைகள் பெற்றோருடன் இணைந்து ஒரே குடும்பமாக ஒவ்வொருநாளும் திருப்பலியில் கூடியமட்டும் பங்குபற்ற வேண்டும். வசதியில்லாத இடத்தில் குடும்பமாக ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றுதல் அவசியம். ஏனெனில் திருப்பலியே இறைமகன் இயேசு தந்தை இறைவனுக்குச் செலுத்தும் உன்னத வழிபாடாகும். அவரது வார்த்தைக்குச் செவி மடுக்கும் நாம் வாசகங்கள் மறையுரை மூலம் எமது கடந்தகால வாழ்வை ஆராய்ந்து எதிர்கால வாழ்விற்கு வளம் பெறுகின்றோம். இறைதந்தையின் பிள்ளைகளாகிய நாம் தந்தைக்கு மிகவும் விருப்பமான ஒரே பலிப்பொருளாகிய சகோதரன் கிறீஸ்துவோடு சேர்த்து அவரூடாக தூய ஆவியில் எமது வாழ்வைக் காணிக்கையாக்கி பலியிடுகின்றோம். தனது மகன் மூலமாக அவரோடு என்மை ஏற்கும் தந்தையாகிய இறைவன் தனது மகனையே எமக்கு விருந்தாகத் தருகின்றார். எனவே இந் நற்கருணைப் பந்தியில் பக்தியோடு பங்கெடுத்து எதிர்கால வாழ்வுக்கு வேண்டிய அருளைப் பெற்றுச் செல்லவேண்டும். பல இடங்களில் சிறுவர்களும் ஒருசில இளையோரும் பெரியோரும் பக்தியைக் குலைக்கும் விதத்தில் தகுந்த ஆயத்தமின்றி முண்டியடித்து நற்கருணைப் பந்தியில் அமர்வதும் நற்கருணை பெற்றவுடன் செபமேதுமில்லாமல் அருகில் இருப்பவருடன் கதைப்பதும் திருப்பலிக்கு வந்தாலும் வெளியிலே நின்று பார்வையாளர்கள் போன்று குறிப்பாக மறையுரை வேளைகளில் கதைப்பதும் விலக்கப்பட வேண்டும். சுரூபப் பவனிக்குக் கைகுவித்துக் கண்ணீர் மல்க பயபக்தியோடு புனிதரை நோக்கிச் செபிக்கும் நாம் நற்கருணைப் பவனிக்கு கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கும் நிலை மாறவேண்டும்.

## ஞாயிறு - ஆண்டவரின் நாள்

ஞாயிறு தினம் ஓய்வுநாளாக எமது யாழ். திருச்சபையில் மட்டும் அல்ல முழு இலங்கையிலும் உலகின் பல பாகங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இத் தினத்தில் கூடிய மட்டும் வீட்டிலே தங்கியிருந்து திருப்பலியின் மையக்கருத்து, வாசகங்கள், மறையுரை போன்றவற்றைத் தியானிப்பதும் பிள்ளைகளோடு அவை பற்றி உரையாடுதலும் வேதாகம வாழ்வில் பழக்கப்படுத்தலும் எமது குடும்ப ஆன்ம வாழ்வை பலப்படுத்தி, வளம்படுத்தி, ஆழப்படுத்த உதவும். குடும்ப செபமாலைக்கும் குடும்ப செபத்திற்கும் குடும்ப நற்செய்திப் பகிர்விற்கும் அதாவது அனைத்துக் குடும்ப நிகழ்விற்கும் குடும்பத் தலைவன் தலைமை தாங்குவது மிகச் சிறந்ததாகும். இல்லத்தில் மகிழ்ச்சி ஏற்பட குடும்ப செபத்தில் அனைத்து அங்கத்தவர்களும் பங்கெடுப்பது அவசியம். அவ் வேளையில்தான், எமது பிள்ளைகள் சிறந்த விசுவாசப் பயிற்சியைப் பெறுகின்றார்கள். இது விசுவாசக் கையளிப்பிற்கு உதவியாக இருக்கும்.

எமது ஆலய மறைக்கல்வி பல இடங்களில் குறிப்பிட்ட பாடத்தை வாய்மொழிப் போதனையாக கற்பிப்பதில் மட்டும் நின்றுவிடுகின்றது. ஏனோ நடைமுறை செயற்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. ஒருசில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் மறையாசிரியர்கள் பிள்ளைகளோடு சேர்ந்து நற்கருணைப் பேழைக்கு முன் செபிப்பது, திருச்செபமாலை, திருச்சிலுவைப் பாதை போன்ற பக்தி முயற்சிகளைச் செய்வது, மனவல்லய செபங்களில் பயிற்சி அளிப்பது என்பவை மிகவும் குறைவாகவே உள்ளன. இவ்விதமான நடைமுறை விசுவாசப் பயிற்சிகள் இல்லாமல் வளரும் எமது இளம் தலைமுறையினர் தமது வருங்கால சந்ததியினருக்கு அறிவுசார்ந்த விளக்கங்களோடு கூடிய விசுவாசத்தையே கையளிக்கக் கூடிய அபாய நிலை ஏற்படுகின்றது.

## ஆலயங்களின் புனிதத் தன்மை

எமது ஆலயங்களில் பல இடங்களில் வீட்டுச் சண்டைகளும், மனவைராக்கிய போட்டி பொறாமைகளும் அரங்கேறும் நிலை தவிர்க்கபட்பட்டு, இறைத்தநதைக்கு உன்னத வழிபாடு செலுத்தும் சூழலாக ஆலய சுற்றாடல் மாறவேண்டும். இன்று 2ஆம் வத்திக்கான் சங்க மறுமலர்ச்சியின் காரணமாகவும் அன்பிய குழும வாழ்வை வாழவேண்டிய அவசியத்தின் காரணமாகவும், எங்கு கிறீஸ்தவ திருச்சபையின் மக்கள் ஒன்றுகூடுகிறார்களோ அவர்கள் மத்தியில் ஆலய வசதிகள் இல்லாத சூழ்நிலையிலும் "மக்கள் மத்தியில் குடிசை திருப்பலி" என்னும் அர்த்தமுள்ள செயற்பாடு உருவாகின்றது. இந்நிலை வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும். மக்கள் எல்லோரும் பொயிதொகையில் ஒரே இடத்தில் ஞாயிறு திருப்பலிக்காக ஒன்றுகூட வேண்டிய தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் நாங்கள் ஆலயங்களை நாடுகின்றோம். நாம் எல்லோரும் பரிசுத்த ஆவியின் ஆலயங்கள் என்பதை உணர்த்துவதாகவும் திருப்பலிக்கு முன் பின்னாக நற்கருணையின் முன்பு மக்கள் ஒன்றுகூடி செபிப்பதற்கு வசதியாகவும் மக்கள் எல்லோரும் பங்குபற்றக்கூடிய பொதுவான இடமாகவும் ஓர் ஆலயம் திகழ்கின்றது. ஆனால் இன்று ஆலய உரிமைப் போட்டிகள் காரணமாக, ஆலய வழிபாடுகள் வெறும் உயிரற்ற அர்த்தமற்ற கண்காட்சியாக பல இடங்களில் மாறுகின்றன. இது தவிர்க்கப்பட்டு ஆலயங்களில் அர்த்தமுள்ள வழிபாடுகள் இடம்பெறுமாயின் பாடல்களிலும் செபங்களிலும் மக்கள் எல்லோரும் மனந்திறந்து கூச்சமில்லாமல் வாய்திறந்து சத்தமாக பங்குபற்றி இளைவனைப் போற்றிப் புகழும் நிலை ஏற்படுமாயின் பயனுள்ளதாகும்.

## சிறு கிறீஸ்தவ குழுமங்கள்

அயலவர் மட்டில் கரிசனையும் மதிப்பும் கொண்டு வாழும்போதே வழிபாடு வாழ்வாகின்றது. நற்கருணையின் பிரசன்னங்களாக எம்மை உடைத்து நொறுக்கித் தியாகவாழ்வு வாழவேண்டிய நாம், இறைவார்த்தையின் தூதுவர்களாக நற்செய்தி மதிப்பீடுகளுக்கு எம் வாழ்வில் அர்த்தம் கொடுக்க வேண்டிய நாம், அயலவரை எம்மிலும் உயர்ந்தவராகக் கருதி வாழ்வதற்கு, சிறிய கிறீஸ்தவக் குழுமங்களை அமைப்பதன் வழியாகவே உதவிபெறமுடியும். நாம் வாழும் சூழலில், எமது சுற்றாடலில் பங்குபற்றும் திருச்சபையாக மாற, இச் சிறு கிறீஸ்தவ குழுமங்கள் உதவிசெய்கின்றன. ஏனெனில் குழுமங்களின் குழுமமாக ஆலய, பங்கு திருச்சபைகள் விளங்கும்போது, இச் சிறு கிறீஸ்தவ குழுமங்களே அச் சூழலில் திருச்சபையின் துல்லியமான வெளிப்பாடாகும். அதாவது திருச்சபையில் கிறீஸ்தவ மதிப்பீடுகள் வாழப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டக்கூடிய உண்மையான கனம் சிறு கிறீஸ்தவ குழுமங்களாகும்.

மேலும் சிறு கிறீஸ்தவ குழுமங்கள் எல்லோருக்கும் ஓர் இல்லம். அதாவது இல்லம் என்பது பெற்றோரும் பிள்ளைகளும் அன்புறவோடு வாழும் ஓர் இடம். இதேபோல் சிறு கிறீஸ்தவ குழுமங்கள் ஓர் ஆலய சுற்றாடலில் வசிக்கும் ஞானஸ்நானம் பெற்ற அனைத்துக் குடும்பங்களுக்கும் அங்கத்துவம் வகிக்கக்கூடிய ஓர் இல்லம். பணக்காரர், ஏழை, கற்றவர், கல்லாதோர், வேறு ஆலயங்களைச் சேர்ந்து இக் குறிப்பிட்ட ஆலய சுற்றாடலில் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ வசிப்போர், எல்லோரும் அங்கத்துவம் வகிக்க முடியுமாதலால் இது எல்லோருக்கும் ஓர் இல்லமாகின்றது. ஏனெனில் இங்கு முதலாவது பண்பாக அயலவர் ஒன்றுகூடுதல் வேண்டும். மனத்தாங்கல்கள் கூடுதலாக ஏற்படும் இடம் அயலவர்களாக இருப்பதனால் அருகருகாக உள்ள வீடுகளில் வசிப்போர் ஒன்றுகூடியே சிறு கிறீஸ்தவக் குழுமம் ஒன்றை அமைத்தல் வேண்டும்.

அங்கு இரண்டாவது அம்சமாக இறைவார்த்தையை வாசித்து எமது வாழ்வில் நாம்பெற்ற இறை அனுபவத்தை உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தில் பகிர்ந்து கொள்கின்றோம். மூன்றாவது விடயமாக இறைவார்த்தையால் தூண்டப்பட்டு பணியாற்றுகின்றோம். அயலவரின் தேவையில் துனபத்தில் இன்பத்தில் இங்கு நாம் ஒன்றாகப் பங்குபற்றுகின்றோம். நான்காவதாக உலகத் திருச்சபையோடு ஒன்றுபடுகின்றோம். இயேசுவின் பதிலாளாகவும் இறைமக்களின் இணைப்பாளராகவும் குரு விளங்குகின்றபடியால், திருப்பலியில் பங்குபற்றுவது குழும அங்கத்தவர்களின் இன்றியமையாத செயற்பாடாகும்.

ஏனெனில் நற்கருணைப் பலிக்கு ஈடான உன்னத செயற்பாடு இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை. இது மீட்பின் செயற்பாடு. ஏனெனில் முன்னெப்போதும் இல்லாதவாறு இன்று பல திடீர் மரணங்களைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம். மனந்திருந்தி வாழ சந்தர்ப்பம் அவகாசம் இல்லாமல் கூட அவலப்பட்டுப் பலர் இறக்கின்றார்கள். இதனால் தமது ஆன்மீக வாழ்வில் பாராமுகமாக இருந்ததால், அதாவது இவ்வுலகில் இறைஇரக்கத்தின் காலத்தை அருள்வளங்களை அசட்டை செய்ததினால் தங்கள் பாவ அக்கிரமத்திலேயே இறக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஏனெனில் இவ்வுலகில் ஒவ்வொரு வினாடியும் எண்ணற்ற முறையில் பலவிதமான பாவச்செயல்கள் அரங்கேறுகின்றன. எனவேதான் இறைமகன் இயேசு "இதோ உலகமுடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" மத். 28:20 என்று கூறிய இயேசு இறுதி இராவுணவு வேளையில் நற்கருணையை ஏற்படுத்தியபோது, "எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" லூக். 22:19 என்று கூறி குருத்துவத்தை ஏற்படுத்திய இயேசு, அவ்வேளை முதல் இன்றுவரை உலகின் ஒவ்வோர் இடங்களிலும் திருப்பலியில் தன்னையே பரம பிதாவிற்கு நேசபலியாக்கிக் கொண்டிருக்கிறார். ஏனெனில் ஓரிடத்தில் வசீகர வார்த்தை தொடங்கும்போது, இன்னோர் இடத்தில் அது முடிவடைவதை உலகெங்கும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலி நேரங்களில் இருந்து அறிய முடிகிறது. பாவ அக்கிரமங்களால் நிறைந்துள்ள உலகில் திருப்பலி உலகமுடிவு வரை தொடர்பலியும் எமது ஆன்ம விருந்துமாகின்றது. இந்த மீட்பின் செயல், இவ்வுலகில் சாத்தானின் பிடியில் சிக்கியுள்ள மானிட சமுதாயத்தின் அக்கிரமங்கள் அநியாயங்களுக்கு நாம் துணைபோகும்வரை தொடர்ந்து கொண்டேயிருக்கும். நாம் எமது பாவச்செயல்களை நிறுத்தி எம்மை புனிதப்படுத்த முயற்சி எடுக்கவேண்டும். எனவே இத் தொடர்பலியின் மூலம் அன்புறிவில் ஒன்றிணைந்த மக்களாக உலகத் திருச்சபையோடு இணைதல் அவசியம்.

சிறு கிறீஸ்தவக் குழுமவாழ்வு ஆலயங்களில் நாம் காணும் பல்வேறு பக்திச்சபைகளைப் போல் இன்னுமோர் பக்திச் சபையல்ல. இது ஓர் ஆலய பங்கு மறைமாவட்டத் திருச்சபையில் அங்கம் வகிக்கின்ற திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறீஸ்தவரையம் கிறீஸ்துவிற்கு சாட்சியம் பகர அழைக்கும் ஓர் வாழ்வாகும். இது ஓர் சபையல்ல. மாறாக இது ஓர் வாழ்வு. நற்கருணைப் பலி வாழ்வின் சாட்சியமாகும்.

எனவே இந்த யூபிலி ஆண் டில் புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக மலர பங்குபற்றும் திருச்சபையாக மாற, நற்கருணை உடைபடும் தியாக வாழ்வு வாழ நாம் அனைவரும் அன்பிய வாழ்வில் இணைவோம். இதன் மூலம் யாழ். மறைமாவட்டத் திருச்சபை புதியதோர் உலகை நோக்கி வீறுநடை போடும் என்பது திண்ணம்.

(முடிவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

25-12-2000

## தாழ்ந்தோரை உயர்த்திட!

குவலயத்தை மீட்டிடவே
குடிசையில் பிறந்தாய்!
ஆணவத்தை அழித்திடவே
அவணியில் பிறந்தாய்!

அவலம் ஒழித்திடவே
அன்பு கொண்டு வந்தாய்!
ஐக்கியம் வளர்ந்திடவே
ஐயா இயேசு பிறந்தாய்!



அன்பியம் மலர்ந்திடவே
அன்பின் அண்ணலாய் வந்தாய்!
வளம் பெருகிடவே
விண்ணில் இருந்து வந்தாய்!

தாழ்ந்தோரை உயர்த்திடவே
தாழ்மையாகப் பிறந்தாய்!
தரணி போற்றிடவே
தாய் மடியில் தவழ்ந்தாய்!



இடுக்கண் தீர்த்திடவே
இவ்வுலகில் பிறந்தாய்!
போர் முழக்கம் கேட்டிடவே
போர் கழைய வந்தாய்!

அடக்குமுறை அழித்திடவே
அமைதி கொண்டு பிறந்தாய்!
வீழ்ச்சியுற்றோர் விழித்திடவே
விண்ணவர் போற்றிட பிறந்தாய்!

*V.P. தனேந்திரா*
*அரியாலை*

## ஆர்பரிப்பு

இறைமகனார் சமாதானப் பிரபு எங்கள்
இரட்சகராய் மனுமகனாய் அவத ரித்தார்
கறைபடிந்த வழிகளெலாம் செம்மை யாகும்
கண்ணீரின் பள்ளமெலாம் நிரவ லாகும்
நிறைதவறி உயர்ந்தமலை அகந்தைக் குன்று
நிர்மூல மாயழிந்து தாழ்ந்தே போகும்
மறைநெறியில் மனதுயர்வோம் மகிழ்ச்சி நீடும்
மங்கலப்பொற் புத்தாண்டின் மலர்ச்சி காண்போம்

துன்பமெனும் கந்தையிலே பொதிந்த வாறாய்த்
தொல்லுலகின் பரிசாகப் பிறந்த பாலன்
அன்பினிலும் கருணையிலும் துயர்கள் மாளும்
அரவணைப்பின் வலக்கரத்தே அகிலம் வாழும்
இன்னிசையின் எக்காளத் தொனியின் கீதம்
எண்டிசையும் எதிரொலிக்கும் விண்ணின் மன்னா
மின்னலிடை மழையாகப் பொழியும் சாந்தி
மீதுாரப் புத்தாண்டின் எழுச்சி காண்போம்

உன்னதத்தின் மேலிருந்தே உலகம் யாவும்
ஊடுருவிப் பார்ப்பவரைப் பாசான் நாட்டு
மன்னவனை வதைத்தவரைச் சிதறிப் போன
மந்தைகளாம் இஸ்ராயேல் மக்கள் தம்மைத்
தன்னகத்தே ஒன்றிணைக்கும் தயவின் ஊற்றைத்
தாழ்ந்தோரைக் கையேந்தித் தஞ்சம் நல்கும்
பொன்னுலகின் முப்பொருளைப் புகழ்வோம் இந்தப்
புத்தாண்டிற் சத்தியத்தின் உயர்ச்சி காண்போம்

புதியதொரு பாடலினை இசைத்தே என்றும்
புகழ்பாட வரமீந்த சீயோன் வேந்தன்
எதிரிகளின் சிறையுடைத்தே துாயோர் தம்மை
இரட்சித்து மீட்டெடுத்த இரக்கத் தேவன்
அதிகடினப் பாறைதனை நீரூற்றாக
ஆக்கவல்ல அதிகாரன் ஆரோன் மக்கள்
துதிபுரிந்த நம்பிக்கைத் துணைவன் பாதம்
தோத்திரிப்போம் புத்தாண்டின் அமைதி காணுபோம்.

யாழ் ஜெயம்

## அன்பான பாலகனே!

அன்பான பாலகனே!
ஆண்டவராய்ப் பிறந்தவரே
இனிய வாழ்வு தருவதற்கு
ஈசனாய் உதித்தவரே
உம்மையே நாங்களும்
ஊற்றாக நம்புகிறோம்
எம்வாழ்வு மலர்ந்திடவே
ஏழ்மையில் பிறந்தவரே
ஐயம் களைந்து நீரும்
ஒன்றாக்கி எம்மையே
ஓரணியில் வாழவைப்பீரே
ஒளடதமாம் பாலகனே



சி.தனுாஜன்
தரம் - 5 யா ஆனைப்பந்திமெ.மி வித்தியாலயம்

## ஒளியாக உதித்திடுவீர்!

விடியாத பொழுதுகளாய்
விடைதேடாக் கேள்விகளாய்
விடியலைத் தேடுகின்றோம்
விடையாக எழுந்திடுவீர்

அமைதிக்காய் ஏங்குகின்றோம்
அனுதினமும் வேண்டுகின்றோம்
சமாதானத் தென்றலிலே்
சந்தோசமாய் உலாவி வர

பறிபோகும் உயிர்கள் என்று
பதகளித்து இடம் பெயர்வோர்
பல்குழலின் உயிர்க்குடிப்பால்
பரிதாபமாய் உயிர் திறப்போர்

செல்லுமிடம் தெரியாது
ஷெல்லுக்கு ஒதுங்கி நிற்க
சென்று வரும் கிபீர் ஒன்று
செல்வோரின் உயிர்பறிக்க

தந்தை, மகன், தாயிருக்க
தன் அன்புமகள் உயிர்போக
தன் கண்ணாற் பார்க்கின்ற
தவிப்பு நிலை பெற்றோர்க்கு

உறவுகளை உடைமைகளை
உயிர்களையும் இழக்கின்றோம்
உடைந்துவிட்ட உள்ளத்துடன்
உம் வரவைப் பார்க்கின்றோம்

மனித மாண்பு சிதைகின்றதே
மனுசீகம் மறைகின்றதே
மனுவாக உதித்த வேந்தே
மனிதத்தை உணர்த்த வாராய்

விடியாத பொழுதுகளில்
விடிவை நாங்கள் தேடுகின்றோம்
விடைகாணா கேள்விகளுக்கு
விடைதேடி அலைகின்றோம்

முடிவடையா போர் ஓய்ந்து
முடிவொன்று கிடைக்காதா
விடிவாக ஒளி தருவீர்
விடையாக அமைதி தந்து

*திருமதி R. மேரி இமாக்குலேற்*

## உலகத்தின் ஒளியே உள்ளத்தில் வாரும்!

உலகத்தின் ஒளியே! உள்ளத்தில் வாரும்
கலகத்தை நீக்கிக் கருணையில் சேரும்.

நற்கருணைப் பிரசன்ன நாயகரே! வருக
அர்ச்சிக்கும் பூங்கரத்தால் அருளாசி தருக.

ஊன்குருதி உவக்கும் வான்விருந்தே! எமது
ஆன்மீக திருப்பயணம் அருளூட்டிக் காரும்

ஆயனின் அழைப்பில் ஆசைகள் அறுத்து
ஆயத்த விண்வீடு சுதந்தரிக்க வையும்.

செபநோன்பு பிறரன்பு பணிவாழ்வுத் துறவில்
தவநெறியில் அதிகரிக்க ஆவியருள் வீசும்

பாதாரம் பணிந்து பரிகாரம் தேடும்
ஊதாரிப் பாவிகளை உடமையாக ஏரும்

குற்றமான உள்ளம் தானமாக்கும் எமக்கு
ஒப்புரவ அடையாள மன்னிப்புக் கூறும்

மனப்புயல் தீர்க்கும் மறைபொருள் மன்னா!
"சினம் கொண்டு ஊழியனைத் தள்ளி விடாதேயும்"

சித்தங்கள் கலங்கிச் சிதறிய மந்தை
தத்தளிக்கும் நிர்க்கதியைத் தற்பரனே! பாரும்.

தனிமையில் முதுமையில் சிறைகளில் வாடும்
பரிதாபக் கேவலங்கள் பாலகனே! தீரும்.

*ஞா.அரியமலர்*
*மிருசுவில்*
*(சில்லாலை)*

## யுத்தத்தின் ஜனனம்



போர் போர் என
இடியது முழங்க
வீமான மேகங்கள்
குண்டு மழை பொழிய
இரத்த ஆறது
வெள்ளமாய் பாய்கிறது

தாயவள் மண்ணிலே
தனித்துவ அகதிகளாய்
அலைந்து திரிகின்ற
அனாதைத் தமிழரின்
வியர்வை கூட உறைந்து
இரத்தமாகும் நிலை



விட்டுத்தான் கொடுக்காது
பட்டுத்தான் சுகம் கண்டு
மற்றவன் பொருள் மீது
மனமதைப் போக விட்டு
பொறாமை எனும் தீயில்
பொசுங்கும் போதுதான்
யுத்தத்தின் கருவது பாரினில்
சத்தமின்றி உருவாகிறது



பிறரது உரிமைகளைக்
கவர்ந்திட முயல்கையில்
பலாத்கார செயல்களில்
பலமுடன் இணைகையில்
உளவுகள் தோன்றிட
பிளவுகள் வளர்கிறது
சமூகத்தினுள்ளே யுத்தத்தின்
ஜனனம் நிகழ்கின்றது



தத்தமது சுதந்திரத்தை
சொத்தாகப் பேணிட்டு
மற்றவன் சுதந்திரத்தை
கால் செருப்பாக கருதிட்டு
வாழும் சமூகம் எத்தனை!
நட்சத்திர பிணங்களுக்கு
நடுவினிலே நடந்து வரும்
விதவை நிலவாக எம் இன
மாதர் தான் எத்தனை எத்தனை

ஆற்றங் கரைகளினிலே
ஆரம்பித்த நாகரிகம்
இன்று எம்மவர்
இரத்த ஆற்றினிலே
தாகம் தணிப்பதற்கு
காரணம் யுத்தமே
இவ் யுத்தமது கருக்கொள்ள
வித்திட்டது எம் சுற்றமே!

சமூகத்தினுள் பிளவு
சமூகங்களிடை பிளவு
நாட்டினுள் பிளவு
நாடுகளிடை பிளவு
என்கின்ற ரீதியில்
பிளவது வளர்கிறது
யுத்தமது தொடர்கிறது

ஓ!!! சமுதாயமே - நீ
உணர்ந்து கொள்ள மாட்டாயா?
ஒற்றுமைக்கு அத்திவாரமிடு
ஒழியட்டும் யுத்தமது
ஓங்கட்டும் சமாதானமது!!!

M. யூஜின் ஷர்மிலானி
இளவாலை

## பாலகனே வந்திடுவீர்!

மார்கழியின் மழையினிலே
மாதாவின் மடியினிலே
மாசுள்ள இவ்வுலகில்
பாவந்தனை அழித்திடவே
பாலகனவே வந்தருள்வீர்

ஏழ்மைதனை எடுத்துரைக்க
குடில்களிலே எமக்காக
குழந்தையாய் பிறந்தவரே!
இவ்வுலக மக்கள் செய்யும்
பாவந்தனை மன்னித்து
இரட்சிப்பை தந்தருள்வீர்

சிவராசா சுதன்
பரி. யோவான் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுவுரு இன்று





*"ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார் ; ஓர் ஆண்மகவு நமக் குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும் அவர் திருப்பெயரோ 'வியத் தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்' என்று அழைக்கப்படும்" (எசாயா.9:6)*

"வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்" என்று தினமும் மூவேளை சொல்லப்படும் செபத்தின் அர்த்தம் என்ன? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்து முடிந்துவிட்ட செயலா மனுவுரு? இல்லை. பாலகன் இயேசு நேற்றும், இன்றும், நாளையும் ஏன் என்றென்றும் பிறந்த கொண்டே இருக்கிறார். இதுதான் எம்முடைய யூபிலி ஆண்டின் மைக்கருத்தும்கூட.



விண்ணை ஆளும் வேந்தன் இம்மண்ணுக்கு மனிதனாக வந்து பாவிகளை மீட்க பரதேசிக் கோலமெடுத்து, பாவங்கள் நிறைந்த உலகை, பாசிகள் வளர்ந்த உள்ளத்தை பன்னீர் கொண்டு கழுவிய நாள். கடவுள் மனிதனைத் தேடி வந்து புது வாழ்வு வழங்கிய திருநாள் தான் கிறிஸ்மஸ் பெருவிழா. எனவே பாலகன் இயேசுவின் வருகையால் இப்பூவுலகம் களிகூருகின்றது. நாம் ஒவ்வொருவரும் ஆனந்தப் பண்பாடி அகமகிழ்கின்றோம். ஏனென்றால் நமக்காக இன்று மீட்பர் பிறந்துள்ளார்.

இறைமகன் கிறிஸ்துவின் பிறப்பிலே விண்ணவர் "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" (லூ க். 2:13–14) என்று கீதம் இசைத்து முதன் முதலில் இடையர்களுக்கு அவரது பிறப்பை அறிவித்தனர் இறைவனது மீட்புச் செயலின் பயன் அமைதியாகும் எமக்கும் கடவுளுக்கும் ஏற்பட்ட பிளவைச் சரிப்படுத்தி நம்மை இறைவனுடன் இணைக்கவும் நமக்குள் சமாதானத்துடன் வாழவும் வழிவகுக்கவே தெய்வம் மீட்பின் கடவுளானார்.

மீட்பு என்றால் என்ன? பொதுவாக மீட்பு என்ற சொல்லை எதற்காக பயன்படுத்து கின்றோம் என்று தெரிந்து கொள்வோமென்றால், கிறிஸ்துவின் மீட்பு என்ற சொல் லின் பொருளை அறிந்து கொள்ளலாம். நடுக்கடலில் புயலில் சிக்கிய கப்பலும் அதிலிருந்து மாலுமிகளும் மீட்கப்பட்டார்கள். கடும் போர்ப் பிரதேசத்தில் அகப்பட்ட பொது மக்கள் மீட்கப்பட்டார்கள். தீயின் நடுவே சிக்கி உயிருக்காக போராடிய குடும்பம் மீட்கப்பட்டது என்று செய்தித்தாளில் படிக்கின்றோம். அதாவது நம்மால் எது வும் செய்ய முடியாமல் வாழ்வே போய்விட்டது என்று வருந்துகின்ற வேளையில் வெளியில் இருந்து ஒருவர் வந்து நமக்கு உதவி செய்து, புதுவாழ்வு தரும் செய லைத்தான் மீட்பு என்று சொல்கின்றோம்.

இவ்வாறுதான் பாவம் என்னும் கொடிய படுகுழியில் விழுந்து வாழ்வை இழந்த, வாடி நின்ற வேளையில் மீட்பர் இயேசு எம்மைத் தேடி வந்து தன் நேசக்கரத்தால் எம்மை மீட்டு புதுவாழ்வு வழங்கிய புனித நாள்தான் கிறிஸ்மஸ் பெருவிழாவாகும்.

நாமும் வருடா வருடம் கிறிஸ்து பிறப்பு விழாவை ஆடம்பரத்தோடும், புதுப் பொலிவுடனும் கொண்டாடு கின்றோம். ஆனால் எம் வாழ்க்கை முறைதான் அந்த சின்னஞ்சிறிய பாலகன் இயேசு எமக்களித்த நற் செய்திக்கு முரணாகவுள்ளது. இதுவா கிறிஸ்மஸ் எமக்குத் தரும் பாடம்?

தொடக்கத்தில் கூறியது போல் மனுவுரு என்றோ முடிந்துவிட்ட செயல் அல்ல. இன்றும் தொடர்கின்றது. எனவே இரண்டாயிரமாம் யூபிலி ஆண்டில் எங்கே பிறப் பாரோ, எவ்வாறு பிறப்பாரோ என்று எதிர்பார்க்கப்படுகின்ற இயேசு பாலனுக்கு எம் உள்ளங்களை தீவனத் தொட்டிகள் ஆக்கிக் கொடுப்போம், அப்போது அவர் அங்கே அமைதியாகப் பிறந்திடுவார்.

**ஆக்கம்:— சகோ. ச. சத்தியராஜ்**

# இறைமகன் இயேசுவும் இடம்பெயர்வு!..

## ஆண்டவனும் அகதி!!.. அவர் நிலையும் அவதி!!!..

**அருள்திரு. செ. அன்புராசா (அ.ம.தி)**

*"புதுயுகம் புலர்ந்தது புது இனம் மலர்ந்தது. புதிய நல் இதயங்கள் இணைந் ததிங்கே. பகைமைகள் மறைந்தது. புதுமைகள் நிறைந்தது..."* எனத் தொடரும் வழிபாட்டுப் பாடலை இயேசு பிறப்பின் 2000 ஆம் ஆண்டு நிறைவிலும், புத்தம் புதிய யுகத்தின் விடியலிலும் மகிழ்ந்து பாடுகிறோம். இருப்பினும், இந்த யுகம் புலருமா? புலர்ந்தாலும் எப்படிப் புலரப் போகிறது? அதிலே, ஒரு புது இனம் எவ்வாறாக மலரப்போகிறது? இத யங்கள் எப்போது இணையப் போகின் றன? பகைமைகள் எக்காலத்தில் மறை யப் போகின்றன? புதுமைகள் எப்போது நிகழப் போகின்றன?... போன்ற கேள்வி கள் எம்முள்ளங்களில் எழுந்த வண் ணமே இருக்கின்றன.



இதற்குக் காரணம் இருக்கத்தான் செய்கிறது. போரின் தாக்கங்களும், அதன் விளைவுகளும் ஆறாத காயங்க ளையும், மாறாத வடுக்களையும் எம்மு டைய வாழ்விலே எற்படுத்திவிட்டன. இத னால், சோர்ந்து, நொந்து, நலிந்து வாழ் வதிலே எவ்வித பிடிப்புமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இடம் பெயர்ந்து பெயர்ந்தே, வாழ்வதற்கான பலத்தை இழந்துவிட்டோம். கிறிஸ்து பிறப்பின் 2000ஆம் ஆண்டு யூபிலி நிகழ் வைக்கூட எம்து சொந்த வீடுகளையும், நிலங்களையும் இழந்த நிலையில், இடம்பெயர்ந்த முகங்களோடும், அகதிமுகாம் முகவரிகளோடும் கொண்டாட வேண்டியிருக்கிறதே என்ற ஏக்கப் பெருமூச்சும் எம்மை வருத்துகிறது.

ஆயினும், கிறிஸ்து பிறப்பின் 2000ஆம் ஆண்டு மாபெரும் யூபிலி என்று கூறப்படுகின்ற நிகழ்வானது, இப்போது நாம் அனுபவிப்பது போன்று, இடம்பெயர்வு நிகழ்வுடனேயே ஆரம்பித்தது என்று சொல்வதற்கு எம் வேதநூல் (விவிலியம்) சான்று பகர்கிறது.

விவிலியத்தில் காண்பதுபோல சுமார் கி.மு. 1250 ஆண்டுகளுக்கு முன்னர் இறைவனால் அழைப்புப் பெற்ற இஸ்ரவேல் மக்களுக்கும் ஓர் இடம்பெயர்வு காத்திருந்தது. "இஸ்ரவேல் மக்கள்... இடம்பெயர்ந்து சென்றனர்" (வி.ப.12:37). எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கான இடம்பெயர்வு (வி.ப.12:37-14:31). அதாவது, அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலை வாழ்வு வாழ இடம்பெயர்ந்தனர் என்கிறது விடுதலைப் பயண நூல். இது இறை அழைப்பின் பெயரிலான இடம் பெயர்வு. இத்தோடு முடிந்ததா இடம்பெயர்வின் இன்னல்கள் இஸ்ரவேலருக்கு?...

இஸ்ரவேல் அரசு யூதா, இஸ்ரவேல் என இரண்டு இராட்சியங்களாக உரு வாகின்றன. மீண்டும் இஸ்ரவேலின் ஒரு பகுதியினர் அசீரியாவுக்கு கி.மு.722இல் துரத்தப்பட்டனர். (2அரசர்18:11) மறுபகுதியினர் கி.மு.587 இல் அந்நிய தேசமாகிய பபிலோனியாவுக்கு விரட்டப்பட்டனர். இப்படியாக இஸ்ரவேல் வரலாற்றில் இடம் பெயர்வு, அகதிவாழ்வு, அன்னிய ஆக்கிரமிப்பு போன்றன மக்களுக்குச் சொல்ல முடியாத சோகங்களை உருவாக்கியிருந்தன. இத்தனைக்கும் எத்தனை எத்தனை முணுமுணுப்புக்கள் (வி.ப.15:24), முறுமுறுப்புக்கள் (வி.ப.17:3), முறுகல் நிலைகள் (வி.ப.17:7)!...

இற்றைக்கு, சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரும் மீண்டும் ஒரு பயணம் ஆரம்பித்தது. கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்கு தம் பெயரைப் பதிவுசெய்ய மக்கள் விரைந்தனர். (லூக்.2:3). காரணம், மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது. அம்மக்கள் கூட்டத்தில் யோசேப்பு - மரியா குடும்ப மும் சென்றது. அன்னை மரியாவுக்கு தனது ஒரே மகனைப் பெற்றெடுக்கும் காலம் - பேறுகாலம். வீடுகள் மக்களால் நிரம்பி வழிந்தன. விடுதிகளிலும் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. (லூக்.2:7). விடுதிவிறாந்தையிலுமா ஒரு பாய்விரிக்க இடமிருக்க வில்லை!... பரவாயில்லை ஏழைகளுக்கு இன்று போல அன்றும் மாட்டுக் கொட்டில், மரநிழல் தஞ்சம் கொடுத்தன. தாய் மரியாவும் தன் குழந்தையை துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தி னாள் (லூக்.2:7). அத்தோடும் அப்பயணம் முடிய வில்லை!...

அடுத்த கட்டநகர்வு ஆரம்பித்தது... "எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும்" (மத்.2:13) என்ற அறிவுறுத் தலில் அக்குடும்பம் புறப்பட்டது. அச்சத்தின் பெயரி லான இடம்பெயர்வு. எளிமையான குடும்பம், சாதா ரண வருவாயுள்ள குடும்பம், பச்சிளங் குழந்தை, கடும் குளிர், தூரப் பிரயாணம், தனித்த குடும்பம், "ஐயோ" என்றழுதாலும் உதவ யாருமில்லாத நகர்வு. இவை ஒருபுறமிருக்க, என்ன நடக்குமோ என்ற பயமும், அடுத்தது என்ன என்ற ஆதங்கமும், எகிப்துக்குச் சென்று எங்கிருப்பது என்ற குழப்பமும் மனத்திலே சஞ்சலங்களை ஏற்படுத்தின. ஆண்டவனும் அன்று அகதியானான். அவரும் அன்று தப்பியோட வேண்டிய நிலை என்று எண்ணும்போது "இது என்ன உலகமடா?" என்ற ஏக்கத்தில் இதயமே நின்று, பின் துடிக்கிறது. அதனால்தானே என்னவோ, ஆக்கிரமிப்புக் களாலும், அனர்த்தங்களாலும் ஏற்படக் கூடிய இடம்பெயர்வு, அகதிவாழ்வு என்பன எப்படிப்பட்டது என்பதை ஆண்டவனும் அறிவார். அதை அவரும் அனுபவித்தார் என்னும் போது இத்துன்பங்களைத் தாங்க எமக்கு சக்தி பிறக்கிறது. அப்படிப்பட்ட இறைமகனின் பிறப்பின் 2000ஆம் ஆண்டு யூபிலியைத்தான் இந்நாட்களில் விசுவாச நிகழ்வாக நினைவுகூருகின்றோம்.

ஆம் இயேசுவும் இம்பெயர்ந்தார் (மத்.2:13). **ஆண்டவனும் அகதியானான்!... இன்று, அவர்பாடும் அவதிதான்.** நாமும் இயேசுவோடு தப்பி ஓடிச்சென்று எகிப் திலே (மத்.2:13) வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மீண்டும் இயேசுவோடு நசரேத்துக்குச் சென்று நலமுடன் வாழச் செய்வார் நம் இறைவன் (மத்.2:23)

இடம்பெயர்ந்து எகிப்திலிருக்கும் இயேசு, தமது 2000ஆம் ஆண்டு அகவை ஆசீர்வாதங்களை எம்மனைவருக்கும் அளித்திடுவாராக.

### அமலனைத் தேடுகின்றோம்

**அமலனைத் தேடுகின்றோம் அடியவர்கள் நாமும்**
**ஆலாய்ப் பறந்து ஆவி சோருகின்றோம்**
**இறைவனே உம்மை நாம் இரந்திரந்து தேடுகின்றோம்**
**ஈசனே இனியவனே ஈடாடும் எம் வாழ்வை**
**உமக்காக நாம் வாழ உதித்தீரே எம்மிடையே**
**ஊருராய் நாமும் ஊசலாடித் திரிகின்றோம்**
**எம்மவர் வாழ்வுதனை எந்நாளும் காப்பவரே**
**ஏதிலியாய் நாமும் ஏங்கியேங்கி அலைகின்றோம்**
**ஐயனே பாலகனே ஐயங்களைத் தீர்ப்பவரே**
**ஒன்றாக உழைத்துதித்து ஒருமித்த வாழ்வு வாழ**
**ஓர்குலமாய் எம்மவரும் ஓசான்னாப் பாடிடவே**
**ஔவியம் நீக்கி வாழ ஔடதமாய் நீரும்**
**அஃதே வந்திடுவீர் அஃதே நாம் வாழ்ந்திடுவோம்**

**நிசாந் யா/மத்திய கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MERRY CHRISTMAS

# "சிதறிய வாழ்வும் சிறைவாசமும் நீங்கிட..."



"மாளிகையும் இல்லை மஞ்சமில்லை என்றாலும் ஏழைத் தொழுவில் வந்த இறைமகனே தாலேலோ!"

இயேசு காவியம்

"நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது. நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளான். ஆட்சியின் பொறுப்பு அவருடைய தோள் மேல் இருக்கும். அவருடைய பெயரோ வியத்தகு ஆலோசனையாளர், வல்லமையுள்ள இறைவன், முடிவில்லாத தந்தை, அமைதியின் மன்னன்" என வழங்கப்படும். (எசா. 9:6)

ஆக்கம் S.M. வுளோறன்ஸ்
சென் ஜேம்ஸ்
இளவாலை

என்ற இறைவாக்கினரான எசாயாவின் இறைவாக்கு உலக மீட்பரான இயேசுக் கிறிஸ்துவைக் குறித்தே அவர் உலகில் மனித அவதாரம் எடுப்பதற்கு ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. அப்போது வாழ்ந்த இஸ்ராயேல் குலமும் அமைதியின் மன்னன் மெசியாவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தது. அவ்வாறே இன்றைய யுகமும் ஒன்றுடன் பத்தாகி, பத்துக்கள் நூறாகி, நூறுகள் ஆயிரமாகி, ஆயிரங்கள் மிலேனியங்களாகிவிட்ட வேளையில் மூன்றாவது மிலேனியத்துக்குள் கால் பதித்துள்ள நாமும் மீண்டும் ஒரு புதிய கிறிஸ்மஸ் விழாவை எதிர்கொள்கின்றோம். புதிய மிலேனியத்தில் மலரும் முதல் கிறிஸ்மஸ் விழாவாக அமைந்துள்ளமை பெருமகிழ்ச்சிக்குரியதோர் விடயமுமாகும்.

இத்தகைய மகிழ்ச்சி ஒருபுறம், மறுபும் நவீனு யுகக் கலாச்சாரங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப ஆற்றல்கள்; கண்டுபிடிப்புகள், இன்ரநெற் வழங்கும் இன்பமான வசதிகள் என மனிதனின் வாழ்வு சிந்தனை, சொல், செயல் நிறைந்த, புதுமைமிக்க நவீனத்துவத்தை உருவாக்குவதிலேயே உன்னிப்பாக செயல்படுவதைக் காண்கின்றோம். அதற்காக மனிதன் தன் உழைப்பு, உதிரம், உயிர் அனைத்தையும் இழக்கத் தயாராகுகின்றான். இவ்வாறான உலகியல் சார்புகொண்ட மனிதன் தன் வாழ்வின் ஒருபக்க அம்சத்தில் மட்டும் நிறைவுற்றவனாக நவீன மயக்கத்தில் மூழ்கி வாழ்வின் மறுபக்க அம்சமான ஆன்மீகத்தை மறந்துவிடுகின்றான். மனித மாண்பற்ற, இறைதேடல் அற்ற, அனுபவரீதியான ஆன்மீகமற்ற அவனது நவீன வாழ்வை நோக்குமிடத்து அவன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமைவாதியாக காணப்படுகின்றான்.

ஏனெனில் இன்றைய உலகம் பல புத்தாக்கப் படைப்புக்களில் மலர்ந்து விரிந்து வளர்ந்துவிட்ட போதும், மனிதத்தின் மாண்புகளும் அவற்றினூடே கூட எவ்வளவு தூரம் வளர்ச்சி கண்டு வாழ்வின் அர்த்தத்தினை எடுத்தியம்புகின்றன? என்பது பெரும்பான்மையோரின் உள்ளத்தில் விடைகாண முடியாத விளைவாகவே உள்ளது. இக்கால சமூக நிலைப்பாடுகளை எடுத்து நோக்கின் எங்கு பார்ப்பினும், போரும், வன்முறைகளும், இல்லிடமற்ற இடம்பெயர்வுகளும், மனிதத்தையே அவலமாக மதிக்கும் அகதிநிலைகளும், சுதந்திரமற்ற வாழ்வுகளும் அநீத கைதுகள், விசாரணையற்ற சிறைவாசங்கள் என்று தீவினைகள் முற்றுப்பெறாத சங்கிலித் தொடராகவே செய்கின்றன. இத்தகைய நிலைகள் இன்றைய மனிதனின் விசுவாச வாழ்வையே விலங்கிட்டு விட்டன. சிங்காசனத்தில் அமர்ந்திருந்துள்ள சிந்தனையற்றவர்களின் போக்குகள் இன்றைய மனிதனுக்கு சிதறிய வாழ்வையே பரிசாக்கி நிற்கின்றன. இவ்வேளையில் நாம் எதிர்கொள்கின்ற கிறிஸ்மஸ் விழா உண்மையான மகிழ்வினை அளிக்கின்றதா? என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

இன்றைய மனிதன் அனுபவிக்கும் சிறைவாசத்தை நோக்கின் உளச்சுதந்திரம், உரிமைச்சுதந்திரம் தனிமனித உள்ளத்திலோ குடும்பத்திலோ சமுதாயத்திலோ காணப்படவில்லையாயின் அதுவும் ஒருவித சிறைவாசமே. இதனால் ஆன்மீகத்தின் ஒளி தெளிவாகப் புலப்பட்டாது, விசுவாச வாழ்வு சிதறடிக்கப்படுகின்றது. மேலும் பல்வேறு வடிவம் கொண்ட போரின் பொறிமுறைகள், சமுதாயச் சீரழிவுகள், நவீன மோகத்தில் உருவாகும் ஆரோக்கியமற்ற உறவுச் சிதைவுகள், குடும்பப் பிளவுகள், பழிவாங்கலுக்கான காட்டிக்கொடுப்புகள், இவ்விடத்திற்கு முகவரியே வரையமுடியாத வாழ்வுகள் அனைத்தும் மனிதத்தில் பகல் வாழ்வை இரவுக்குள் மூழ்க வைப்பதாகவே அமைந்துள்ளன.

மேலும், விரும்பப்படாத வதைமுகாம்கள், விஷமத்தனமான படுகொலைகள், படுகொலைகளை மூடி மறைக்கும் புதைகுழிகள், பெற்றார், உற்றார் வரலாறுகள் அழிக்கப்பட்ட வாழ்வுகள், உண்மையற்ற உறவுகள் இவை அனைத்தும் எந்த வகையில் எமக்கு விடுதலையைத் தருகின்றன? மாறாக விசுவாச வாழ்விற்கு சவால்களாக அமைந்து ஆன்மீகத்திற்கு அர்த்தம் கொடுக்கமுடியாத அவல நிலையைத் தான் ஏற்படுத்துகின்றன. ஆயினும் இவற்றினூடே தான் புதிய மிலேனியத்தின் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாட உட்படுத்தப்பட்டிருக்கும் நாம், ஆண்டுதோறும் வரும் நத்தார் விழா போன்று இதுவும் ஓர் ஆண்டுவிழா என்ற சிந்தனைப் போக்கில்தான் வாழ்கின்றோமா? இல்லை; நில், நிதானி, செயற்படு என்ற முச் சமிக்ஞைகளையும் நன்குணர்ந்து செயற்படுகின்ற சமூகமாக உருவாகின்ற கிறிஸ்மஸ் விழா விடுக்கின்ற அமைதியின் செய்திக்கு எம்மைத் தயாராக்குவோமா? என்பது ஆழமாகச் சிந்திக்க வேண்டிய விடயம்.

எனவே அமைதியின் மன்னன் அளித்த அமைதி வாழ்வு எம் மனங்களிலும், எமது மண்ணிலும் நிலவுவதன் வழியாக உண்மையான விடுதலை வாழ்வு எமக்குக் கிடைக்கட்டும். இத்தகைய உண்மை விடுதலை வாழ்வு எம்மிடையே முழுமையானதோர் அன்புறவுச் சமூகத்தை; புதுப்பித்துப் பகிரும் சமூகத்தை உருவாக்க வேண்டும். அப்போதுதான் எம்மிடையே புரையோடியுள்ள சிறைவாசங்களும், சிதறிய வாழ்வுகளும் நீங்கும். இதனையே புதிய மிலேனியத்தில் மலரும் கிறிஸ்மஸ் விழாவினூடாக இறைமகன் கிறிஸ்துவும் எமக்கு அருளவேண்டும் என்ற ஆவலில் அவர்பதம் நாடுவோம்.

# யூபிலி விழாக் கிறிஸ்து பிறப்பு

எமது சிறுபிராய வாழ்க்கையில் கிறிஸ்து பிறப்பு விழா நிகழ்ச்சிகள் எம் மனதை விட்டகலாது என்றும் உவகையுடன் நினைவுகூரப்படும் நிகழ்ச்சியாகும். இரவில் கண் துகிலாது விழித்திருந்து நடுச்சாமத் திருப்பலிக்குச் செல்வோமென்னும் ஆசையுடன் விழித்திருக்கையில், எம்மையறியாது துயில்கொள்ளும் வேளையில், கிறிஸ்து பிறப்பு விழாத் திருப்பலிக்கான ஆயத்த மணியோசை எம்மை விழித்தெழச் செய்கின்றது. இவ் வேளையில் நாம் தட்டுத்தடுமாறி ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் எம்மைத் தயார்ப்படுத்தி ஆலயத்திற்குச் செல்லும் வேளையில் எம் மனதினில் ஏற்படும் உவகை சொல்லிலடங்காது.

திருப்பலியின் பின் எமது நண்பர்களுடன் கூடிக்குலாவி கரோல் கோஷ்டியுடன் வீடுவீடாகச் சென்று கிறிஸ்மஸ் தாத்தாவின் ஆசீரோடு பணம் சேகரித்து தர்மஸ்தாபனங்களிடம் கொடுப்பதில் நாம் பெறும் இன்பமும் மகிழ்ச்சியும் அளவிட முடியாதவொன்று. சிறுபிராய முடிவின்பின் இளைஞர் நிலையில் நாம் அடையும் உணர்வும் சிந்தனையும் அகமகிழ்வும் வேறோர் வகை. திருமணமான பின் ஏற்படும் கிறிஸ்மஸ் விழா எம் பொறுப்புக்களையும் மழலைச் செல்வங்களின் வாழ்வையும் சிந்திக்க வைக்கும் விழாவாக அமைகின்றது. முதுமைப் பருவத்தில் நாம் பூரணமாக கிறிஸ்து பிறப்பு விழாவின் ஆழமான அர்த்தத்தையும் இறைவன் தெய்வமகன் இயேசு உலகிற்கு வழங்கும் அன்பையும் ஆதரவையும் அருட்கொடைகளையும் அறிய முடிகின்றது.

எவ்வழியிலும் கிறிஸ்து பிறப்பு விழா சிறந்த விழாவாக இருக்கும் பொழுது, 2000ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை யூபிலி விழாவாகக் கொண்டாடுமாறு திருத்தந்தை 2ம் அருளப்பர் ~ சின்னப்பர் எம்மை அழைத்திருக்கின்றார். சாதாரண கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு நாம் எவ்வளவோ முக்கியத்துவம் கொடுக்கும்பொழுது, யூபிலி ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுமாறு திருத்தந்தை எம்மை அழைத்திருக்கையில் நாம் அதற்கு எவ்வித முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதைக் கூறவும் வேண்டுமோ?

யூபிலி வருட கிறிஸ்து பிறப்பு விழா, பல விசேட அருட்கொடைகளையும் ஆசீர்களையும் சமாதானத்தையும் எங்களுக்கு வழங்கவிருக்கின்றன. எமக்கு ஏற்படவிருக்கும் இந் நிகழ்ச்சிகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு பிறந்தபொழுது அன்னை மரியாளும் சூசையப்பரும் அநுபவித்த வாழ்வை நினைவுகூர வைக்கின்றது. இந் நிகழ்ச்சி பற்றி ஆகமனகாலத் திருப்பலி உரை, எல்லாக் கூற்றுக்களுக்கும் மேலாக இயேசுவை அன்புடன் தமது உதரத்தில் கருத்தாங்கினார் எனக் கூறுகின்றது.

யூபிலி கிறிஸ்து பிறப்பு விழாவின் உயர்ந்த நிலையை அண்மிக்கையில். கிறிஸ்மஸ் நாட்கள் சிறுவர்களால் ஆர்வமுடன் எதிர்பார்க்கும் கிறிஸ்மஸ் தாத்தாவைக் காட்டிலும், இயேசுவே எமது ஆர்வத்துக்கும் அன்புக்குமுரிய மேலானவர். எம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் கரோல் கேஷ்டியினரால் எழுப்பப்படும் கிறிஸ்மஸ் கீதங்கள் எமக்கு மகிழ்ச்சியையும் சாந்தியையும் ஏற்படுத்துகின்ற போதும், தேவதூதர்களினால் அன்று இறைமகன் இயேசுவுக்கு பாடப்பட்ட இன்னிசைக் கீதங்கள் மங்களகரமானது. கிறிஸ்மஸ் விழாவில் பிறக்கும் குழந்தை இயேசு அவரது வார்த்தை மூலம் எமக்கு என்றுமே அளியாத நல்வாழ்வாகிய பேரின்ப வாழ்வை எமக்கு அளிக்கின்றார்.

2000ம் ஆண்டுகளுக்கு முன்பு புன்னகையோடு பெத்தலோ மாட்டுக்கொட்டிலில் பிறந்த இயேசு எமக்கு அளிக்கும் வாழ்வு நிரந்தரமானது, முடிவில்லாததும் மகிழ்ச்சிகரமானதுமான வாழ்வாகும். இவ் விழாவில் நாம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அயலானுக்கும் கொடுத்து மகிழ்வதோடு நில்லாமல், இயேசுவைப் போன்று நாம் அளிப்பதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளக்கூடிய துன்பப்படுவோருக்கும் இதனைத் திருப்பித் தரமுடியாதவர்களுக்குமான ஏழைகளுக்கும் அளிப்பதே பொருத்தமானதும் இயேசு விரும்பும் கொடையுமாகும்.

இறைமகனாம் இயேசு, நற்செய்தியை உலகிற்கு அளிக்கவும் பாவிகளை மீட்கவும் துன்பப்படுபவர்களைத் தேற்றவும் பரம தந்தையால் உலகிற்கு அனுப்பப்பட்டவர். நாம் புதிய மூன்றாம் புத்தாயிரம் ஆரம்ப கிறிஸ்மஸ் விழாவாகவும் திருத்தந்தையால் வெளிப்படுத்தப்பட்ட யூபலி விழாவாகவும் இக் கிறிஸ்து பிறப்பு விழா நம்மிடையே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த, துன்பப்படுவோர் சுகம் காணவும் அடிமைப்பட்டோர் விடுதலையடையவும் எம்மை வழிநடத்துமாறு பரமதந்தையாம் இறைவனிடம் வேண்டுவோம்.

நாவாயூர் பாலா
கனடா

# யாரைத் தேடிச் செல்கின்றாய்?

கொட்டும் மழையில் முக்காடு போட்ட சேலைக்காரி ஒருத்தி, இடுப்பில் கைக்குழந்தை ஒன்றுடன், வீடு வீடாகப் பிச்சை கேட்டு அலைந்து வருகின்றாள். அவள்தான் புனிதம். உற்ற கணவனை உலை வைத்த உலகிலே, பெற்ற பிள்ளையை பெரும் சுமையாகக் கொண்டு ஏனோ இந்த வாழ்வு என்று ஏங்கியவளாக, பரிதவித்த நிலையில் கையேந்தி நிற்கின்றாள் அந்தப் புனிதம். இவளது நிலை கண்டு இரங்குவோர் சிலர், விரட்டியடிப்போர் பலர். யார் இவள்? போ வெளியே! இது அடிக்கடி புனிதத்தின் செவிகளில் தவழ்ந்து நிற்கும் கசப்பான வார்த்தைகள்.

கிறிஸ்து பிறப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மார்கழி மாதமது. எங்கும் ஒரே பரபரப்புத் தடபுடல்கள். நத்தார்ப் பூசைக்கான பற்பல ஆயத்தங்கள். இல்லங்கள் தோறும் கிறிஸ்மஸ் குடிலை அலங்கரிப்பதிலும், பலகார வகைகள் சிற்றுண்டிகள் தயாரிப்பதிலும், புத்தம் புதிய ஆடையணிகளை விலைகொடுத்து வாங்குவதற்காக திரள் திரளாக வீதியிலே அலைந்து செல்லும் மனிதர். இப்படி எத்தனையோ பல நிகழ்வுகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

இத்தனை நிகழ்வுகளுக்குள்ளும், வீடு வீடாக, வீதி வீதியாக கதி கலங்கிய நிலையுடன் பிச்சைக்காக அலைந்து திரிகின்றாள் புனிதம். *யார் நீ? ஏன் நிற்கின்றாய்?* என்றொரு வார்த்தை கூட ஒருவரும் கேட்டதும் இல்லை. அவளை ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை.

அன்று மார்கழி மாதம் 24ம் திகதி நத்தார்ப் பூசை விழாவுக்காக ஆலயமணிகள் ஆரவாரமாக ஆர்ப்பரிக்கின்றன. கண்ணைக்கவரும் புத்தாடைகளை அணிந்தவர்களாக, ஆலயத்தை நாடிச் செல்கின்றனர் பல பக்திமான்கள். அங்கே *நீ யாரைத் 'தேடிச் செல்கின்றாய்?'* ஏழ்மையின் உருவிலே குளிரின் கொடுமையால் வருந்தி வைக்கோலைப் போர்வையாக் கொண்டு அமைதியின் உருவிலே காட்சிதரும் குழந்தை இயேசுவைத்தான் நீ காணச் செல்கின்றாய்? ஆனால் அந்தக் குழந்தை இயேசுவின் உருவிலே மறைந்திருப்பது அந்த அப்பாவி புனிதம் தான் என்பதை நீ உணர மறந்துவிட்டாய் போல!

திருமுழுக்கின் மூலம் கிறிஸ்தவனாக மாற்றியமைக்கப்பட்ட மானிடனே! விழித்தெழு. விழித்தெழு சின்னஞ் சிறியோரில் எவருக்கும் நீ எதைச் செய்தாலும் எனக்கே செய்தாய் என்ற வார்த்தையை உன் நெஞ்சிலே ஆழப்படுத்து அப்பொழுதுதான் நீ கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா ஓர் அர்த்தமுள்ளதாகும்.

செல்வி. தவம் குருசுமுத்து, நவாலி

MERRY CHRISTMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தீதிலா எருசலேமின் சிறப்புறு மன்னா! இந்த யூதர்கள் அரசன் எந்த உருவத்தில் எங்கே தோன்றி ஆதரித்தருள வந் தான்?"

இயேசு காவியம்


VFC

**மாபெரும் மலிவு விற்பனை**

யாழ். புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இடம் :
*ஆயர் இல்லத்தின் முன்பாக*


## 7ம் ஆண்டு நினைவஞ்சலி



(03-12-1993 - 03-12-200)
LOURDES RAYMOND MUTTIAH
**லூர்து றேமண்ட் முத்தையா**

உம்மை உமக்கு ஈந்தளித்த இறைவன்
நம்முடன் என்றும் உம்மை வாழவைப்பார்
உமது நினைவில் வாழும்

67/1 ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம்.

*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

## இருபத்தைந்தாவது ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | மறைவு |
|---|---|---|
| 1908 - 02 - 06 |  | 1975 - 12 - 01 |

C. V. E. நவரத்தினசிங்கம் (J.P.)
(இளைப்பாறிய அதிபர், சமூக சேவையாளர்)

நெஞ்சே நினை
"குயிலனைய குழந்தைகட்குக் குளிர்நிழல்செய்
சோலையெனக் கூடி வாழ்ந்தோன்
மயிலனைய மடந்தையர்க்கு மழைமுகிலாய்
வானளவும் வளர்ந்து நின்றோன்
பயிலுமுயர் மாணவருக்குப் பலகலையும்
பரிவினொடு பயிற்றுவித் தோன்
துயிலிழந்தும் பிறர்துயரைத் துடைத்த நவ
ரத்தினத்தை நினையாய் நெஞ்சே"

*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளை, உறவினர்கள்,*
*நண்பர்கள்*

# நெஞ்சகலா நினைவஞ்சலி

## 11ம் ஆண்டு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1928 - 02 - 21 |  | 1989 - 12 - 27 |

பஸ்ரியாம்பிள்ளை பிலிப்புப்பிள்ளை
(பொன்னுத்துரை)

## 3ம் ஆண்டு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1932 - 06 - 01 |  | 1997 - 11 - 09 |

எலிசபேத் பிலிப்புப்பிள்ளை
(இராசேஸ்வரி)

ஆண்டவருடைய இரக்கத்தில்
உங்கள் ஆன்மா மகிழ்ச்சியடையக்கடவது
அவருடைய புகழ்ச்சியில் கலக்கம் அடையமாட்டீர்கள்
(சீராக் ஆகமம் 51:37)

இவர்களின் விண்ணக பரிசுக்காக இறைவனுக்கு நன்றி கூறும்

"கனகராஜாவில்லா"
தபாற் கந்தோரடி
நெல்லியடி, கரவெட்டி.

*பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், சகோதரி :- அருட் சகோதரி தார்சில்லா (H.F.C), உற்றார் உறவினர்.*

# யாழ். மறைமாவட்ட கலாசாரக் குழு நடாத்தும் கலைஞர்களுக்கான செயலமர்வு

மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் கலை பண்பாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள யாவருக்கும் உரியது

| | |
|---|---|
| காலம் | : 09.01.2001 செவ்வாய்க்கிழமை |
| நேரம் | : காலை 9.30 மணி (இலங்கை நேரம்) |
| இடம் | : யாழ். மறைக்கல்வி நிலையம் |
| விடயம் | : * "கலைத்துறை சார்ந்தோரின் அழைப்பும் பணியும்" ~ *அருள்திரு ஜெறோ செல்வநாயகம்* |
| | * தமிழ் கத்தோலிக்க கலைவடிவங்களும் நற்செய்தி அறிவிப்பும் ~ ஓர் வரலாற்று நோக்கு ~ *அருள்திரு ஞா. பீலேந்திரன்* |

யூபிலி ஆண்டில் கலாசார குழு கூட்டத்தில் நாடக எழுத்தாக்கப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கல்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு (ரூ. 2000) | து. டெனி, மல்வம், உடுவில் |
| 2ஆம் பரிசு (ரூ. 1000) | திருமதி ஜெனோவா அல்பிரட் 15 றக்கா வீதி, யாழ்ப்பாணம். |

நான்கு ரூ 5000 பரிசுகள்
1. பா. வேதநாயகம் - தும்பளை, பருத்தித்துறை
2. ம. ஜெனிட்டா - இளவாலை
3. மேரி இமக்குலேற் - பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி
4. முத்தையா துரைசிங்கம் - 18/4 றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதி, யாழ்நகர்.


கலைத்துறை ஆர்வலர் அனைவரையும் இச் செயலமர்வில் பங்கு கொள்ள அழைக்கின்றோம்.

A.R. விஜயகுமார்
செயலர்

அருள்திரு ஜெறோ செல்வநாயகம்
தலைவர்

# நினைவலைகள்

## 9ம் வருட நினைவில்



செல்வன்
*ம. கிறிஸ்ரியன் பெனான்டோ*
*எழுவைதீவு*

தோற்றம் 1972-03-03
மறைவு 1992-11-23

## 1ம் வருட நினைவில்



செல்வி
*ம. மேரி ஜசிந்தா*
*எழுவைதீவு*

தோற்றம் 1974-03-02
மறைவு 1999-11-11

பாசமிகு மக்களே! சகோதர சகோதரியே! நாம் உங்களை இழந்து ஆண்டு பலவானாலும் யுகங்கள் பல உருண்டோடினாலும் எம் எண்ணம் மறைவதில்லை. அண்ணன் வழி சென்ற தங்கையே உங்கள் இலட்சிய பாதைகளில் இளையவர்களை வழிநடத்தவென்று புறப்பட்ட மகளே, வாழ்வின் வசந்தங்களைப் பருக வேண்டிய வயதில் இலட்சியம் காக்கவெனப் புறப்பட்ட உனது உடலைக்கூட பாவி நாம் பார்க்க முடியவில்லை. எண்ணமெல்லாம் இனிக்கவைக்கும் உங்களது நகைச் சுவை எங்கே? மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் உங்கள் இனிய சொற்களெங்கே? நாம் இனிக் கேட்பதெப்போ?

அன்புச் செல்வங்களே உங்கள் ஆன்மா இறைவனில் அமைதி பெற நாளும் வேண்டிடுவோம்.

4ம் வட்டாரம்
எழுவைதீவு

*உங்கள் நினைவில் என்றும் வாழும்*

*பெற்றோர், சகோதரங்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள், சிறியமக்கள்*

## ஆறாம் மாத நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1949 - 01 - 04 |  | 2000 - 06 - 22 |

திருமதி மேரி அமலோற்பவநாயகி ஜெயநாதன்
(சின்னக்கிளி)

"ஆண்டவரே! நீரே என்னைக் காக்கும் கேடயம், நீரே எண் மாட்சி, என்னை தலை நிமிரச் செய்பவரும் நீரே" (தி.பா.3:5)

*இவரின் பிரிவால் துயருறும்*

கணவன், பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்

*நெடிய காடு*
*வல்வெட்டித்துறை*

*மணல் குடியிருப்பு*
*முல்லைத்தீவு*

MERRY CHRISTMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மண்ணிற்கு அமைதி எப்போ..?

மனிதனுக்கும் மனிதன் மரண சாசனம் எழுதிக்கொண்டிருக்கும் இந்த மண்ணிலே நிலையான அமைதி எப்போ மலரப் போகின்றது என்பது தான் அனைவரின் அவாவாகும். படைத்தவனில் அல்ல பல்குழலில் நம்பிக்கை வைத்து நல் அமைதியைத் தேடும் நம் நாட்டுத் தலைவர்களிடையே எப்போ அமைதி எழப் போகின்றது என்பது ஒரு கேள்விக்குறியாகி விட்டது. உயிரற்ற உடல்களை சுமந்துகொண்டு விடிகின்ற ஒவ்வொரு விடியலும் சுமக்கமுடியாத பல சுமைகளையும் ஆற்றமுடியாத பல வடுக்களையும் தந்துகொண்டிருக்கின்றதே ஒழிய அமைதியை அளிக்கவில்லை. மனச்சாட்சிக்கு விரோதமாக மாபெரும் உண்மைகளை மறைத்து மனிதர்கள் வாழும் இந்த மண்ணிலே அமைதி ஒரு எட்டாக் கனியாகி விட்டது. நடமாடும் மனிதர்களிலே அமைதியை காணவிரும்பாமல் உயிர் அற்ற பிணங்களிலே அமைதியை காண விரும்பி கண்ணைத் தோண்டி குண்டை இறக்கி குவலயத்தை சிதைக்கும் கயவர்களிடையே கடவுளின் அமைதி கிடைக்குமா? என மக்கள் மனங்கள் சோர்ந்து போகின்றன.

ஆ, அன்பனே நீர் அன்பினால் எம்மைத் தேடி வந்த நாட்களை நாம் கண்டு கொள்ளவில்லை. அமைதிக்குரிய பல வழிகளை பல அரசுக்கூடாக அறிமுகப்படுத்தினீர். ஆனால் நாம் அறிந்துகொள்ளவில்லை. எம்மைத் தேடி அமைதியின் மன்னனாய் அவனியிலே அவதரித்த உன் சிறு குடிலை எம் ஈர விழிகள் மீண்டும் ஓர் ஆண்டில் உற்று நோக்குகின்றன.

அறியாமையில் அழிழ்ந்திருந்த ஆட்டிடையருக்கு உம் அருள் முகத்தைக் காட்டினீர். மாட மாளிகைகள் தர முடியாத அமைதியை நீர் பிறந்த மாட்டுத் தொழுவம் தரும் என்னும் அசையாத நம்பிக்கையுடன் உம்பால் அடியெடுத்து வைக்கின்றோம். மண்ணுலக வழிகளில் அமைதியைத் தேடி அலைக்கழிந்து ஏமாந்துபோன இஸ்ராயேல் மக்கள் நிரந்தரமான அமைதியைத் தரும் மெசியாவாக உம்மை ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

அனைத்து வழிகளிலும் ஏமாந்து போன இலங்கை மாதா மைந்தர் நாம் உம் தயவு பெற்றவர்களுக்கே அமைதி கிட்டும் என்னும் பேருண்மையை எம் உள்ளங்களில் சுமந்து கொண்டு எதிர்வரும் ஆண்டை எதிர் கொள்கின்றோம்.

ஆ, மன்னவனே அருள்வாய் நாம் ஏங்கித்தேடும் அமைதியை!

*ம.பிரான்சிஸ்க்*
*வெற்றிலைக்கேணி.*

# யுத்தம் இல்லாத பூமி ஒன்றிலே அத்தனே நீயும் பிறந்து வா!

யுத்தம் இல்லாத பூமி ஒன்றிலே
அத்தனே! நீயும் பிறந்து வா!
நித்தம் நித்தம் நாம் சாகிறோம் ~ அவலச்
சத்தம் கேட்டு நீ ஓடி வா!
**புத்தர் சொன்ன அந்தப் போதனை மறந்த**
**எத்தரால் எமக்கு வேதனை**
**மொத்தமும் வாழ்க்கை சோதனை போரை**
**முறியடித்துச் செய் சாதனை!**
மாடு தந்த ஓர் கொட்டிலில் ~ யேசு
மன்னவா! நீயும் உறங்கினாய்
மாடி வீடுடன் கொட்டிலும் ~ இங்கு
தகர்ந்தவர் எங்கு உறங்குவார்?
**கல்வாரி கண்ட சரித்திரம் - உன்**
**கருணையால் வந்த விசித்திரம்**
**தமிழர்க்கென்றொரு சரித்திரம் - அதை**
**விழுங்குதே ஆளும் சமுத்திரம்**
அழியும் பண்பாடு தழைக்க வா! ~ எங்கும்
அலகை நடமாட்டம் ஒழிக்கவா
அகதி வாழ்வுக்கு முடிவு தா! ~ இங்கு
அலையும் தமிழர்க்கு விடிவு தா!

**நவாலியூர் நாயகி**




# மரணவிருள் நடுவினில் வாழ் மக்களுக்கே

"மரணவிருள் நடுவினில்வாழ் மக்க ளுக்கே
மனமலரும் ஒளிதரவும் மக்கள் பாதம்
திருமருவும் அமைதிவழி காண்ப தற்கும்
தெய்வீகக் கருணையினால் இளஞா யிற்றின்
வருகைவரும்" சக்கரியாஸ் இறைவாக்கின்நாள்
வந்ததென நெஞ்சமதில் வரைந்து தேவ
கிருபைதனை இரந்திடுவோம் இருளின் பாவக்
கேடகலப் பீடுபெறப் பிரபை காண்போம்

*யாழ். ஜெயம்.*

# அமைதியின் வெண்புறாவே

புத்தாயிரமாண்டின் புதிய விடியலின் புதல்வனே
புதுயுகத்தில் புதுமைகள் புரிந்திட வாருமையா

குடிலின்றி அலைந்திடும் எம் அவலங்கள் தீர்ந்திட
குண்டுச் சத்தங்களும் செல்லடிகளும் நீங்கிட

பஞ்சம் பசி பட்டினியுடன் கதியின்றி அலைவோர் துயர் அகன்றிட
குளிரிலும் கொட்டும் பனியிலும் வாழ்ந்திடும் கொடுமைகள் மறைந்திட

ஏதிலிகளாக அலைவோரின் உடமைகள் சூறையாகும் நிலை மாறிட
முகாமிலும் விடுதிகளிலும் வாழ்வோர் தம் இல்லம் ஏகிட

அடிமை விலங்கொடிக்கும் அமைதியின் வெண்
புறாவாய் விரைந்தே அன்புடன் வாருமையா

*றூபா செபரத்தினம் - கோப்பாய்.*

# சமாதான நல்வாழ்வைத் தருவீரே

பிறந்தீரே! குழந்தையாக எமக்காக
பிறப்பாலே எம்மையே மீட்பீரே
குவலயம் ஈடேற்றம் பெற்றிடவே
குடிலினில் நீரும் பிறந்திரே
மரியாளின் மகனாக மாண்புடனே
மன்னவனால் வந்தீரே எம்மிடையே
இருப்பிடம் இல்லாமல் நாமெல்லாம்
இரந்திரந்து திரிகின்றோம் பாருமையா,
ஊரூராய் அலைகின்றோம் நாங்களுமே
ஊற்றாக எம்மவர்க்கு அருள்வீரே
நற்செய்தி இடையர்க்கு அளித்தவரே
நம்மவர்க்கும் நல்வழி காட்டுவீரே
சமாதானம் வேண்டுகின்ற நம்மவர்க்கு
சமாதான நல்வாழ்வைத் தருவீரே!



**எஸ்.எஸ். காந்தன் - கஸ்தூரியார் வீதி**

# பாதுகாவலன் ஆசிரியரின் வாழ்த்து

"பாதுகாவலன்" அன்பு நெஞ்சங்களே, கிறிஸ்மஸ் புத்தாண்டு காலத்தில் அன்போடு உங்களை நினைத்து எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

கடந்த ஆண்டில் நீங்கள் செய்த அனைத்துப் பணிகளையும் நன்றியோடு நினைத்து எதிர்வரும் ஆண்டில் எமது 125ஆவது ஆண்டு நிறைவில் தங்கள் பங்களிப்பை நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

கடந்தகாலம் முழுவதிலும் தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் நீங்கி அன்பும் அமைதியும் நிறைந்த ஒரு புதிய யுகம் எதிர்வரும் புத்தாண்டில் பிறக்க பாலன் இயேசுவை வேண்டுவோம்.

உங்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

அருள்திரு ஞூபன் மரியாம்பிள்ளை
பாதுகாவலன் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org